Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் 5 யாழ்ப்பாணம் சோபகிருது சித்திரை 27 ஆம் நாள் துல்ஹஜ் 15 (10-5-63) வெள்ளிக்கிழமை இதழ் 89

ஈழநாடு
சந்தா விபரம்
வாரப்பதிப்பு உட்பட
ஒரு வருடத்துக்கு ரூபா 40-00
6 மாதத்துக்கு ரூபா 21-00
3 மாதத்துக்கு ரூபா 11-00

# இடதுசாரி முன்னணி-காங்கிரஸ் ஒப்பந்தம்?

## மூன்று தொகுதிகளை விட்டுக் கொடுக்கும்

யாழ்ப்பாணம், வெள்ளி

**இடதுசாரி ஐக்கியமுன்னணியுடன் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ளவிருப்பதாகத் தெரியவருகிறது. இம் மாத இறுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் தமிழ்க்காங்கிரஸின் மகாநாட்டில இடதுசாரி முன்னணியுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டியதன் அவசியத்தை காங்கிரஸ் அங்கத்தினர் பலர் வற்புறுத்திக் கூறவிருப்பதாகத் தெரிகிறது.**

இம்மாதம் 26-ம் திகதி தமிழ்க்காங்கிரஸின் மகாநாடு யாழ்ப்பாண நகரமண்டபத்தில் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டு வருகிறது.

காங்கிரஸ் அங்கத்தினர்கள் மட்டும் கலந்துகொள்ளவிருக்கும் இம் மகாநாட்டில் அடுத்த பொதுத் தேர்தலில் வடபகுதியில் இடதுசாரி ஐக்கிய முன்னணியுடன் போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம் செய்துகொள்வது பற்றி ஆலோசனை செய்யபபடவிருக்கிறது.

போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம் செய்யப்படுமானல் உடுவில், பருத்தித்துறை, வட்டுக்கோட்டை ஆகிய மூன்று தொகுதிகளையும் இடதுசாரி ஐக்கிய முன்னணிக்கு தமிழ்க்காங்கிரஸ விட்டுக்கொடுக்குமெனத் தெரிகிறது.

## "தீயநெறிகளை தமிழ்ப்புலவர் காட்டவில்லை"

### கலாநிதி சதாசிவம் பேச்சு

மாவிட்டபுரம், வியாழன்

"இலக்கியம் ஒரு வாழ்க்கை விமரிசனம். வாழ்க்கை விமரிசனம் என்ருல் சமுதாயத்து மக்களது வாழ்கையை புலவன் காணும் முறைமை. இலக்கியம் ஒரு நாட்டு மக்களது கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் காட்டுவதோடு, ஆக்கிய புலவனின் கற்பனை வளத்தையும் காட்டும். வாழ்க்கையில் காணப்படும் பல்வேறுபட்ட தீயநெறிகளை தமிழ்ப் புலவர்கள் காட்டினரல்லர். காரணம் அவற்றைப் படிக்கும் மக்களுக்கு அவை எதுவித பயனையும் பயவா என்பதாலேயே. இன்று இலக்கியம் எழுதுவோர் வாழ்க்கையில் நடக்கும் பல்வேறு நிகழ்ச்சிகளையும் பச்சைப் படியாகக் கூறிவிடுவதனல் இக்கால இலக்கியங்களை வாழ்க்கை விமர்சன நூல்கள் எனக் கூறுவதற்கு இல்லை. அவை ஆக்கிய புலவர்களின் கற்பனை வறுமையையே எடுத்துக்காட்டுகின்றன. தமிழில் ஆக்க இலக்கியம் என்ற ஒரு வகையை ஒருசிலர் புகுததுகின்றனர். ஆங்கில மொழியைப் பிழையாக கற்றதனல் ஏற்பட்ட தவறே இது. ஆங்கிலத்தில் பண்டு எழுந்த இலக்கியங்கள் அனைத்தும் இலத்தீன் மொழி நூல்களைப் பின்பற்றி எழுந்தமையால் ஆங்கில மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நோக்கமாக ஆங்கிலப் பண்பாட்டை படம் பிடித்துக்காட்டும் புது இலக்கியங்கள் எழ வேண்டிய தேவை நேர்ந்தது. இதுவே ஆங்கில ஆக்க இலக்கியத்தின் வரலாறு. ஆனல் தமிழில் சங்ககாலம் தொடக்கம் எழுந்த இலக்கியங்கள் அனைத்தும் ஆக்க இலக்கியங்களே. எனவே இலக்கிய வகைக்குள் அடக்கப்படமுடியாத சிறுகதைகளை ஆகக இலக்கியங்கள் என்று குறிப்பிடுவது சிருஷ்டி இலக்கிய கர்த்தாக்களின் இலக்கியப் புலமையை எடுத்துக்காட்டுகிறது."

வீமன்காமம் இளைஞர் சங்கத்தின் 19-வது ஆண்டு நிறைவுவிழாவில் பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்ட கலாநிதி ஆ. சதாசிவம் "இலக்கியமும் வாழ்க்கையும்" என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இக்கூட்டம் இளைஞர் சங்க முன்றிலில் இளைப்பாறிய பரந்தன் புகையிரத நிலைய அதிபர் திரு. நா. பாலசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. திரு. சதாசிவம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

பண்டைத்தமிழ் இலக்கியங்களாகிய சிலப்பதிகாரம், கம்பராமாயணம் முதலியவற்றில் கவிஞர்கள் படைத்த கதாபாத்திரங்கள் எல்லாம் இன்றும் உயிருடன் வாழ்கின்றன. இன்னும் எத்தனையோ நூற்ருண்டுகளுக்கு வாழ்ந்துகொண்டு வரும் என்பதை கடந்தகால வரலாறு காட்டுகின்றது. புலவர் படைத்த

(8-ம் பக்கம் பார்க்க)

## நால்வரை பொலிஸார் தேடுகின்றனர்

யாழ்ப்பாணம், வெள்ளி

நல்லூரைச் சேர்ந்த இரு சகோதரர்களான நடராசா, நவரத்தினம் ஆகிய இருவரும் வஞ்சகரமான முறையில் கடத்திச் செல்லப்பட்டு வெட்டுக் காயங்களுக்குள்ளான சம்பவம் பற்றி பொலிஸார் நால்வரைத் தேடி வருகின்றனர்.

யாழ்ப்பாணம் செட்டித் தெருவைச் சேர்ந்த நவரத்தினம் பெரியதம்பி, புங்குடு தீவைச் சேர்ந்த ராசா தெய்வேந்திரம், துரைசிங்கம் ஆகிய மூவரையும், நல்லூரைச் சேர்ந்த ஒரு காரின் உரிமையாளர் குமாரசாமியையும் யாழ்ப்பாணம் பொலிஸாரும் வல்வெட்டித்துறைப் பொலிஸாரும் தேடிவருகின்றனர்.

அனுராதபுரத்தில்

## 179 கைக்கடிகாரங்களை பொலிஸார் கைப்பற்றினர்

அனுராதபுரம், வியாழன்

இலங்கைக்குச் சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்டு பின்னர் கொழும்பிலிருந்து அனுராதபுரத்துக்கு எடுத்துவரபபட்டதாக நம்பப்படும் சுமார் 40,000 ரூபாய் பெறுமதியான 179 கைக்கடிகாரங்களை அனுராதபுரம் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இக்கைகடிகாரங்கள் கொழும்பு துறைமுகத்தின் வழியாக "கள்ளக் கடத்தல்" செய்யப்பட்டு பின்னர் அங்கிருந்து அனுராதபுரத்துக்குக் கொண்டுவரப்பட்டதாக நம்பப்படுகிறது.

அனுராதபுரம் தபாற் கந்தோர வழியாகச் சென்ற ஒரு வர்த்தகரின் "பிரயாணிகள் பைக்குள்" இந்தக் கடிகாரங்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது.

அனுராதபுரம் தபாற் கந்தோர் வழியாகச் சென்ற குறிப்பிட்ட வர்த்தகர் பொலிஸார் சந்தேகித்ததைத் தொடர்ந்து அனுராதபுரம் பொலிஸ் நிலயத்துக்குக் கொண்டு செல்லப்பட்டார். அவரிடமிருந்த "பிரயாணிகள் பையை" சோதனையிட்ட சமயம் சுமார் 40,000 ரூபாய் பெறுமதியான 179 கைக்கடிகாரங்கள் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டன. பின்னர் அவரைப் பொலிஸார் சுங்கப்பகுதியினரிடம் ஒப்படைத்தனர்.

இது சம்பந்தமாக குறிப்பிட்ட வர்த்தகர் பொலிஸாரிடம் தெரிவிக்கையில் தம்மிடமிருந்த கைக்கடிகாரங்கள் யாவும் தமக்குச் சொந்தமானவையென்றும் அவற்றை ஒரு "பேமண்" வியாபாரியிடம் தாம் வாங்கியதாகவும் கூறினர்.

இது சம்பந்தமாக சுங்கப்பகுதியினர் விசாரணை செய்துவருகின்றனர்.

## பொதுக் கூட்டம்

கந்தளாய், வியாழன்

கந்தளாய்ப் பகுதிக்கு தமிழ்ப்பேசும் கிராம சேவையாளர் ஒருவரையும் பிறப்பு இறப்புப பதிவுகாரர் ஒருவரையும் நியமிக்கும்படியும் தற்போதைய நியமனங்கள் தமிழ்மக்களுக்கு அதிருப்தி கொடுக்கின்றது எனவும் அரசாங்கத்துக்கு எடுத்துரைப்பதற்காக கந்தளாய் தமிழ்ப்பேசும் மக்களின் பொதுக்கூட்டம் இம்மாதம் 12 ந் திகதி நடைபெறவிருப்பதாக கந்தளாய் பிள்ளையார் பரிபாலன சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

## 200 ஏக்கர் நிலத்தில் கூட்டுறவுப்பாற்பண்ணை

### நுவரேலியா மாவட்டத்தில் நிறுவப்படும்

கொழும்பு, வியாழன்

நுவரேலியா மாவட்டத்தில் ஒரு கூட்டுறவுப் பாற்பண்ணையை நிறுவ விவசாய, காணி நீர்ப்பாசன மந்திரி ஒழுங்குகள் செய்து வருகிருர்.

உள்நாட்டு மக்களின் பால் தேவையை ஓரளவு பூர்த்தி செய்யும் பொருட்டு, நாட்டின் பலபகுதிகளிலும் கூட்டுறவு பால்பண்ணைகள் நிறுவப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் நுவரேலியா மாவட்டத்தில் 200 ஏக்கர் நிலத்தில் பாற்பண்ணையொன்றை நிறுவ விவசாய, காணி, நீர்ப்பாசன மந்திரி திரு. சி. பி. டி' சில்வா ஒழுங்குகள் செய்துவருகின்ருர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டத்தில் காணியைத் திருத்தும் வேலைகளை விரைவில் ஆரம்பிக்கப்படுமென்றும் பசுமாடுகளுக்குத் தேவையான புல்லை இங்கு வளர்க்கப்படும் என்றும் தெரியவருகிறது. விரைவில் ஆரம்பிக்கவிருக்கும் புதிய பாறபண்ணையில் 200 குடியேற்றவாசிகள் அங்கத்தவர்களாகச் சேர்க்கப்படுவார்கள். இது சம்பந்தமான விபரங்களை தயாரிக்கும் பொருட்டு விவசாய, காணி, நீர்ப்பாசன அமைச்சர் திரு. சி. பி. டி' சில்வா குழுவொன்றை அமைத்துள்ளார்.

## வரி விளம்பரம்

### தேவை

டிலிவறி கிளாக்குகள் தேவை. தகுதிக்கு ஏற்ற சம்பளம் வழங்கப்படும்.

ஸ்ரீ லங்கா சலவைத்தொழிற் சாலை, கே. கே. எஸ். ரோட், சுன்னாகம். கிளை: 27, பண்ணை ரோட், யாழ்ப்பாணம். 986

### விற்பனைக்கு

10 கோஸ்பவர் மோட்டார் (G. E. C.) கல்லர், கிறைன்டர், அதற்குரிய சாமான்களும் விற்பனைக்குண்டு. விலாசம்: சு. வையாபுரி, மயிலிட்டி வடக்கு, மயிலிட்டி. 987

### கார் றைவிங்

பல ஆயிரக்கணக்கானவர்களுக்கு றைவிங் பழக்கி நன்மதிப்புப் பெற்ற அனுபவம் வாய்ந்த ஸ்தாபனம் மருதம்ஸ் மோட்டரிங் ஸ்கூல்.

ஆக நூறுரூபாய் செலவில் ஒருகிழமைக்குள் தற்காலப் போக்குவரத்து விதிகளுக்கமைய தெரு ஒழுங்குப் பிரமாணங்களுடன் முழு றைவிங்கும் சிறந்த முறையில் கற்றுக் கொடுக்கின்றோம்.

டெலிபோன் இல: 7185.

மருதம்ஸ் மோட்டரிங் ஸ்கூல், 97, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 988

## தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இலவசம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


ஆசிரியருக்குக் கடிதம்

# ஆசிரியர் இடமாற்றமும் - மனமாற்றமும்

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக வெளிமாகாணங்களில் சேவை செய்த (அரசினர் பாடசாலை - வித்தியாதிபதி முகாமைப் பாடசாலை) ஆசிரியர்கள் பலர் வடமாகாணத்திலசொந்த இடப் பாடசாலைகட்கு 1-6-63 விருந்து அரசினரால் மாற்றப் படவிருப்பதாகக் கூறப்படுகிறது. அதற்கு எதிர்பாகச் சாதக பாதகமான காரணங்களைக் கூறி சில சிறு ஆசிரிய சங்கங்களும், தனிப்பட்டவர்களும் குரல் எழுப்புவதைப் பத்திரிகை மூலமாக அறிய முடிகிறது. பொதுவான ஒருவர், இவற்றை ஆராய்ந்து நோக்குமிடத்து அவர்கள் அனுதாபத்துக்குரியவர்களாக கருதுவர். வடமாகாணத்தில் சொந்த வீட்டிடங்களில் பல வருடங்களாகச் சேவை செய்து தொண்டுகள் பல ஆற்றி, பாடசாலையும் ஆசிரியரும் ஒருவரேயாகி இரண்டறக் கலந்த நிலையில் அவர்கட்கு இவ்விடமாற்றமும் எதிர்கால தேசியக் கல்வித் திட்டமும் பெரும் வேதனையையும், அதர்ச்சியையும் கொடுக்காதிருக்க முடியாது. இவர்களும் தம் அளப்பரிய சேவையை-விசாலித்த கல்வியறிவை-தமிழ்த் தொண்டை- தியாகத்தை வெளி மாகாண இடங்களிலும் பரவவிடுதல்-செறியவிடுதல் மாபெரும் பொது நலமாகும்.

இடமாற்றத்தை ரத்துச்செய்யுமாறும் அல்லது ஒத்திவைக்குமாறும் கல்வி இலாகாவைக் கேட்டுக் கூறப்படும் காரணங்கள் முன்னுக்குப்பின் முரண்பாடானவையாக அமைகின்றன. அவற்றுக்கு விரிந்த விளக்கம் தேவையில்லை. எதிர்க்கும் ஆசிரியர்களே தத்தம் மனச்சாட்சியைத் தூய்மை செய்து மற்றையோர் நிலையில் தம்மை இருத்தி கற்பனைசெய்து உண்மையை உணர்ந்தார்களேயானால் அவர்கள் தாங்களே தங்களை எண்ணி வருந்தாதிருக்க முடியாது.

வெளிப்படையாகக் கூறப்புகின் அவர்களின் மூலாதார ஆசையும் விருப்பமும் அதே அதேயிடங்களில் இளைப்பாறும் வரை சேவை செய்து இன்ப நலன்களை அப்படியே துய்ப்பதே. ஈழத் தமிழ் மக்களின் பல்வகைத் தேசிய உரிமைகளுக்காக நாம் ஒன்றுபட்டுச் செயலாற்றவேண்டிய இத்தருணத்தில் அகன்ற தமிழகக் கனவுகண்டு மொழிப்பற்றும் மனப்பண்பும் தேசிய ஒருமைப்பாடும் இன உணர்ச்சியும் வளர்க்கவேண்டிய இச்சந்தர்ப்பத்தில் அரசினர் பாடசாலைகளை எடுத்துக்கொண்டதும் சட்டம் எப்படியிருப்பினும் வலிந்து முன்வந்து வெளிமாகாணங்களில் பலவித இன்னல்களிடையே கடந்த இக்கட்டான காலங்களிலும் தம் பணியைக் குறைவறச் செய்த ஆசிரிய தமிழ்ச் சகோதரர்களை அன்புக்கரம் நீட்டி, நேசக் குரல் எழுப்பி அழைத்து வரவேற்று சொந்த இடங்களில் சிறிது காலமாயினும் சேவை புரியவிட்டு தாம் அவ்விடங்களை விரும்பி நிரப்புவதே இன்றைய இலட்சிய நோக்காக இருக்கவேண்டியது ஆசிரியப் பெருமக்கள் கடமை.

எனவே அத்தகைய ஆசிரிய பெருமக்கட்கு வெளிமாகாண இடமாற்றத்திற்கு முன் ஒருவகை மனமாற்றமே முதல் அத்தியாவசியமாகத் தேவைப் படுகிறது. தமிழ் மொழி வாழ, தமிழ் இனம் வாழ, ஈழநாடு வாழ அவ்வாசிரியர்களும்பரந்த உளப்பண்பை வளர்த்து வாழ்வார்களாக.

வே. நடராசா
பளை.

## வான்மேல் தென்னை வீழ்ந்தது

மாத்தறை, தபுன்

கம்புறுப்பிட்டியா பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் கம்புறுப்பிட்டியா-மாத்தறை வீதியில் சென்றுகொண்டிருந்த வான் ஒன்றில் தென்னை மரம் வீழ்ந்ததால் ஆறு பிரயாணிகள் படுகாயமடைந்தனர். வான்சாரதியின் நிலைமை படுமோசமாக உள்ளது. இவர் முதலில் காலி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மாத்தறை ஆஸ்பத்திரிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் பற்றி எதுவித தகவல்களையும் பிரயாணிகளிடமிருந்து பெற முடியவில்லை. பொலிஸார் முயற்சித்த போதிலும் எதுவும் சொல்ல முடியாத மூர்ச்சையான நிலையில் பிரயாணிகள் இருக்கின்றனர்.

## கண்தானமளிக்க 600 பேர் விருப்பம்

கொழும்பு, செவ்வாய்

வாழ்க்கையின் பல்வேறுபட்ட பாதைகளிலிருந்தும் சுமார் 600 பேர், தாங்கள் இறந்தபின் தங்கள் கண்களை தானம் செய்ய வெசாக் தினத்தன்று விரும்பி முன்வந்துள்ளார்கள்.

'வெசாக்' தினத்தன்று இவர்கள் தங்கள் பெயர்களை பதிந்து கைச்சாத்திட்டு இலங்கை கண்தான இயக்கத்தினரிடம் ஒப்படைத்தார்கள்.

இவர்களுடன் சேர்த்து கண்தானம் செய்ய விரும்பியவர்களின் முழுத்தொகை 16,000ஆக அதிகரித்துள்ளதாக இயக்கக் காரியதரிசி தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்கிழமை கண்டியில் காலமான, எச். தோமஸின் கண்கள் குருநாகலில் உள்ள ஒரு வாலிபருக்கு பொருத்தப் பட்டுள்ளது.

## பஸ் சேவை ஒழுங்கீனம்

### பிரயாணிகள் அவதி

கொழும்பு, செவ்வாய்

இ. போ. ச. பஸ் சேவையில் ஏற்பட்ட ஒழுங்கீனம் காரணமாக கொழும்பிலும் அதை சுற்றியுள்ள வட்டாரங்களிலும் நேற்றுக்காலை பிரயாணிகளுக்கு பெரும் கஷ்டம் ஏற்பட்டது.

பஸ்சேவை குறைவினால் உத்தியோகத்தர்கள் தங்கள் கந்தோருக்கு செல்வதற்கு மிகவும் கஷ்டப்பட்டார்கள். பல சந்திகளிலுள்ள பஸ் நிலையங்களில் நீண்ட 'கியூ' வரிசை காணப்பட்டது.

பஸ்சேவை குறைவிற்கு முக்கிய காரணம், சாரதிகளும், கண்டக்டர்களும் முதல் நாள் இரவு முழுவதும் தொடர்ந்து பஸ் ஓடியதால் காலையில் சேவை செய்ய முடியாமலிருந்ததே. இன்று பஸ்சேவை வழக்கமான நிலைமைக்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

## புதிய நிர்வாகிகள்

வட்டுக்கோட்டை, வியா.

வட்டுக்கோட்டை காந்திஜீ சனசமூக நிலைய கிராமமுன்னேற்றச் சங்க 14-வது வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. பெருமளவில் புதிய நூல்நிலையம் ஒன்றை அரசாங்க உதவியுடன் நிறுவுவது பற்றிக்கூட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்டது. பின்வருவோர் புது வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு. அ. க. குமாரசாமி; ஜே. பி., உப-தலைவர்கள்: திரு. க. அரியரத்தினம், பண்டிதர் க. மயில்வாகனன், செயலாளர்: திரு. க. துரைசுவாமி, உப-செயலாளர்: திரு. க. துரைராசா, பொருளாளர்: திரு. ந. இராசரத்தினம், பரிசோதகர்கள்: திரு. அ. முருகவேள், திரு.கு. சிவபாதசுந்தரம். 11 அங்கத்தவர்கள் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் நிறுவப் பட்டது.

## வெசாக்தினத்தில் 25 விபத்துக்கள்

கொழும்பு, செவ்வாய்

வெசாக் முதல் தினத்தில் 25 விபத்துக்கள் கொழும்பின் எல்லாப் பாகங்களிலும் நிகழ்ந்துள்ளதாக நகர விபத்து நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதிகமான விபத்துக்கள் சாதாரணமானவை.

வெசாக் பார்வையாளர் நெருக்கடி அதிகமாகவுள்ள வடக்கிலும், தெற்கிலும் தான் மற்ற இடங்களிலும் பார்க்க அதிகமான விபத்துக்கள் நடந்துள்ளதாக பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்தவருட வெசாக் கொண்டாட்டத்தில் சனங்கள் குறைவாகக் காணப்பட்டாலும் வாகனப் போக்குவரத்து அதிகமாயிருந்தது.

'வெசாக்' தினத்தில் காலியில் தயானந்தா என்னும் 5 வயது சிறுவன் காரினால் அடிபட்டு காலி ஆஸபத்திரியில் அன்றிரவே மரணமானதாக பொலிஸ தலைமை நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஏகாதிபத்தியத்தின் அர்த்தம்

கெஸ்பெவ, வியாழன்

பத்திரிகைச் சுதந்திரம் போன்ற ஜனநாயக உரிமைகளைப் பறிப்பதே இந்நாட்டில் ஏகாதிபத்தியம் என்பதற்கு அர்த்தமாகும் என ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார். கிராம விதானைமாரின் கடமைகளையே கிராம சேவகர்களும் செய்து வருவதாகவும், பெயரில்தான் வித்தியாசம் உண்டென்றும் திரு. ஜெயவர்த்தன குறிப்பிட்டார்.

# "மனித வாழ்க்கையோடு இணைந்ததுதான் இலக்கியம்"

## எழுத்தாளர் மகாநாட்டில் இளங்கீரன்

யாழ்ப்பாணம், வெள்ளி

'சிறுகதை மனித வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்ததாக இருந்தால் தான் அது சிறந்த இலக்கியமாகும்' என்று நாவலாசிரியர் திரு. இளங்கீரன் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் இரண்டாம் நாள் கலை இலக்கியப் பெருவிழா இலக்கியரங்கிற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினர். இவ்விழா புதன் கிழமை மாலை யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் சோமசுந்தரப் புலவர் அரங்கில் நடைபெற்றது. திரு. இளங்கீரன் தொடர்ந்து பேசுகையில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் இலக்கிய வளர்ச்சிகளுக்கான முயற்சிகளைக் குறிப்பிட்டு கடந்த பத்தாண்டு காலத்திற்கு மேலாக முற்போக்கு இலக்கியம் இலங்கையில் வளர்ந்துள்ள முறை பெருமைப்படத் தக்கதெனவும் கூறினர்.

நீர்வை பொன்னையன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில்; கலைஞர் கௌரவிக்கப்படவேண்டியது அவசியம் என்று வலியுறுத்திப் பேசினர்.

காலஞ்சென்ற இலங்கையர் கோனின் உருவப்படத்தை திரு. தி. ச. வரதராசன் திரைநீக்கம் செய்துவைத்தார்.

'இலங்கை இலக்கிய வளர்ச்சியில் கடந்த 10 ஆண்டுகள்' என்பது பற்றி நடைபெற்ற உரைக் கோவையில் கவிதை பற்றி சொக்கனும், நாவல் பற்றி தில்லையூர் செல்வராசனும், சிறுகதை பற்றி ஈழத்துச் சோமுவும், நாடகம்பற்றி அ. ந. கந்தசாமியும் இஸ்லாமிய எழுத்தாளர் பணிபற்றி எச். எம். பி. மொகிதீனும் சாகித்தியமண்டலமும் தமிழ் இலக்கியமும் என்பதுபற்றி சமீமும் விரிவுரைகள் நிகழ்த்தினர்.

கலாநிதி சு. வித்தியானந்தன் தலைமையில் கலையரசு க. சொர்ணலிங்கம், நாட்டியாசிரியர் வி சுப்பையா, நாடகாசிரியர் கிருஷ்ணாழ்வார், ஓவியமணி பெனடிக்ற், தவில் வித்துவான் தெட்சணாமூர்த்தி, கீச்சலவீரன் ஆனந்தன் ஆகியோருக்குப் பாராட்டுப் பத்திரங்கள் வாசித்தளிக்கப்பட்டன. மட்டக்களப்பு நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம் பாராட்டுப் பெற்றவர்களுக்குப் பாராட்டுப் பத்திரங்களை வழங்கினர்.

திரு கா. சிவத்தம்பி எழுத்தாளர் சங்கத்தின் அறிக்கையைச் சபையில் சமர்ப்பித்தார்.

கலையரங்கினை வடபகுதி உதவி வித்தியாபதி திரு.சி.உ. சோமசேகரம் தொடக்கிவைத்தார். இராமநாதன் இசைக் கல்லூரி மாணவிகளின் இன்னிசைக் கச்சேரி, ராஜ் நகைச்சுவை நாடகமன்றத்தின் நாடகம் என்பனவும் நடைபெற்றன.

## வெசாக் கொண்டாட்டம்

கொழும்பு, வியாழன்

வெளிமாகாணங்களில் இம்முறை வெசாக் கொண்டாட்டங்கள் விமரிசையற்ற முறையில் கொண்டாடப்பட்டாலும் மக்கள் பெருமளவில் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. வீதிகளில் செய்யப்படும் அலங்காரங்கள் கிராமப் புறங்களில் குறைவாகக் காணப்பட்டதாகவும். பிரித் ஓதும் வைபவங்கள் வழக்கம்போல் பௌத்த விகாரைகளில் நடைபெற்றன.

## எம். பி.க்களுக்குப் பென்ஷன்

### கிராமசபை எதிர்ப்பு

டொன்ற, வியாழன்

"எம். பி.க்களுக்கு பென்ஷன் வழங்கும் உத்தேசதிட்டம் பற்றிப் பரிசீலனை செய்வதற்கு அரசாங்கத்தினல் நியமிக்கப்பட்ட விசேஷ கமிட்டி கலைக்கப்படுவதுடன் அவர்களுக்குப் பென்ஷன்" வழங்கும் தீர்மானமும் உடனடியாக ஒதுக்கப்படவேண்டும். பென்ஷனில் அக்கறை காட்டுவதை விட்டு பட்டினியையும், நிதி நெருக்கடியையும் நீக்குவதற்கு இவர்கள் முயற்சிக்கவேண்டுமென்றுகோரும் தீர்மானம் ஒன்று டொன்ற கிராமசபையினல் அண்மையில் நிறைவேற்றப் பட்டது. தீர்மானத்தின் பிரதி பிரதமருக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

## உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

மன்னார், வியாழன்

மன்னார் மாவட்ட உதைபந்தாட்டக் கழகத்தினரால், வெற்றிக்கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப்போட்டி நடத்தப்பட்டு வருகிறது. சிலபோட்டி முடிவுகள் வருமாறு:-

மன்னார் இளம் நட்சத்திரக் கோஷ்டியும் விக்டோரியாக் கோஷ்டியும் கலந்து கொண்ட போட்டியில் விக்டோரியாக் கோஷ்டி 5—0 கோல்களால் வெற்றியீட்டியது.

வங்காலை சென். மேரிஸ் கோஷ்டிக்கும் அடம்பன் சென். ஆன் கோஷ்டிக்குமிடையே நடைபெற்றபோட்டியில்மேரிஸ் கோஷ்டி 3—0 கோல்களால் வெற்றியீட்டியது.

அரசாங்க சேவைக் கோஷ்டிக்கும் பொலிஸ் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் அரசாங்க சேவைக் கோஷ்டி 7—4 கோல்களால் வெற்றியீட்டியது.

## சைவபரிபாலன சபை 75-வதுஆண்டு விழா

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் 75-து ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை, சபையின் நாவலர் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. அன்றைய தினம் காலை எட்டு மணிக்கு வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் விசேட பூசையுடன் விழா ஆரம்பமாகும். காலை 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை சபையின் ஆச்சிரம சிவபூசை மண்டபத்தில் சிவபூசையும் ஆசீர்வாதமும் நடைபெறும். இரவு 7 மணிக்கு நடைபெறவிருக்கும் பொதுக் கூட்டத்திற்கு சபைத்தலைவர் திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை தலைமை வகிப்பார். பொதுக் கூட்டத்தில் திரு. சீ. விநாசித்தம்பி 'மாணிக்கவாசக சுவாமிகள்' என்னும் பொருள் பற்றி சங்கீத கதாப்பிரசங்கம் செய்வார்.

## பென்பெல்லா எகிப்து செல்வார்

அல்ஜியர்ஸ், மே 9

அல்ஜீரியாவுக்கு விஜயம் செய்த ஐக்கிய அரபுக் குடியரசு ஜனதிபதி நாஸர் நேற்று, கப்பலில் தாயகம் திரும்பினர். துறைமுகத்தில் ஜனதிபதி நாஸரை ஆயிரத்துக்கதிகமான மக்கள் வழியனுப்பி வைத்தனர்.

ஜனதிபதி நாஸரின் அழைப்பிற்கிணங்க, அல்ஜீரியாப் பிரதமர் பென்பெல்லா இம் மாதம் 18-ம் திகதி எகிப்துக்கு விஜயம் செய்வார்.

# பாம்பு, பூனை, கொக்குகளில் சுவையான மது

## இளவரசிக்கு அனுப்பப்பட்ட திருமணப் பரிசு

ஹங்காங், மே. 8

பாம்புகள், காட்டுப்பூனைகள், கொக்குகள் ஆகியவற்றை மதுவாக வடித்தெடுத்துச் சில நாட்களுக்கு முன்னல் அதை இளவரசி அலெக்சாந்திரியாவுக்குத் திருமணப்பரிசாக இங்கிருந்து அனுப்பி வைத்துள்ளனர். இந்தப புது வகையான மதுவை அனுப்பியவர் இங்குள்ள ஒரு மது உற்பத்தியாளர்.

ஹான் செர்க்-காவ் என்னும் அவர், 200 வருடமாக வழிவழியாக அவருடைய குடும்பத்தார் செய்துவரும் மதுத்தொழிலைச் செய்துவருபவர். இவருடைய இரட்டை யாழி, புல், சாவிலிருந்து எழும் பினிக்ஸ் பறவை என்னும் பெயர் தாங்கிய மதுவகைகள் மிகவும் பெயர்பெற்றவை.

சுமார் ஒன்றரை ஆண்டுக்கு முன்னல் இளவரசி அலெக்சாந்திரியா ஹாங்காங் வந்திருந்தபோது மேற்படி மது வகைகள் உண்மைதானென்று அறிய ஹானின் கடைக்குப் போனர். மதுவில் கொஞ்சம் வாங்கிச்சுவைத்த அவர் அதை அப்படியே திருப்பித் தந்துவிட்டார். ஏனெனில் ஆபிரிக்காவில், விமான எண்ணெய், இதர "ஸ்பிாட்டுகளைக் கொண்டு தயாரிக்கும் "ஸ்புட்னிக்" எனப்படும் காட்டமான மதுவைப்போன்றவை ஹானின் சரக்குகள்.

பாம்பு மதுவை அவர் தயாரிக்கும் விதம் மிகவும் சுவையாக இருக்கிறது. 200காலன் கொள்ளக்கூடிய ஒரு மட்பாண்டத்தில் பாதி அளவுக்கு அரிசியிலிருந்து எடுத்த மதுவை நிரப்புகிறார்கள். இதில்மூன்று வகையான பாம்புகளில் இருநூறை அப்போதே கொன்று போடுகிறார்கள். மேலும் ஐந்து புனுகுபூனைகள், பத்து சிறு கொக்குகள் ஆகியவற்றைப் போடுகிறார்கள். இவை அனைத்தும் விசேஷமாக சீனவிலிருந்து வந்தவை.

பாம்புகள் வாதநோயைக் கண்டிக்க என்றும், புனுகு பூனைகள் பலத்தைக்கொடுப்பதற்கு என்றும், கொக்குகள் நல்ல உடல்நலத்தைத் தருவதற்கென்றும் அவற்றை இம்மதுவில் சேர்க்கிறார்கள். இம்மூன்றும் மகிழ்ச்சிகரமான திருமணத்துக்குக்கட்டாயம்தேவை என்று அவர்கள் கருதுகிறார்கள். மேற்கொண்டு மூலிகைகள், ஈச்சம்பழங்கள் ஆகியன தொட்டியில் போடப்பட்டு, தொட்டியை சீல்செய்து மூடிவிடுகிறார்கள். பின்னர் ஐந்து ஆண்டுகள் கழித்து ஒரு குளிர்ச்சியான நாளில் தொட்டியில் உள்ள சரக்குகளை எல்லாம் எடுத்துவிட்டுத் திரவத்தைத் துணியாலோ, தாளாலோ வடிகட்டுகிறார்கள்.

சீனத்தின் தென்பகுதியைச் சேர்ந்த உலகெங்கிலுமுள்ள சீனர்கள் இந்த மது சகலவியாதிகளுக்கும் கைகண்ட மருந்து என்று நம்புகிறார்கள்.

தன் கடைக்கு வந்தபோது முன்னர் தானளித்த மதுவை அருந்த மறுத்ததுபோல் இதையும் இளவரசி மறுக்காமல் மனத்தை மாற்றி அருந்துவார் என்று ஹான் நம்புகிறார்.

---

இவ் வருடம்

## 'அணு சோதனையில் உடன்பாடு இருக்காது'

— கென்னடி

வாஷிங்டன், மே 9

அணுசோதனையில் இவ்வருடம் உடன்பாடு ஏற்படாது என்று அமெரிக்க ஜனதிபதி கென்னடி நேற்று பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் கூறினர்.

மேற்கு ஆசியாவில் ஆயுதப் போட்டியை மட்டுப்படுத்த அமெரிக்கா விரும்புகிறதென்றும் அணுஆயுத சோதனையில் உடன்பாடு எதுவும் காணப்படாவிட்டால் உலகில் பல தீமைகள் விளையலாம் என்றும் ஜனதிபதி கென்னடி கூறினர்.

---

## தடுப்புச்சிகிச்சையின் பின் மரணம்

யாழ்ப்பாணம், வெள்ளி

இளம்பிள்ளை வாத தடுப்புச் சிகிச்சையைத் தொடர்ந்து ஆறுவயதுச் சிறுவன் ஒருவன் மரணமான சம்பவம் கோண்டாவிலில் நடைபெற்றுள்ளது.

கோண்டாவிலைச் சேர்ந்த பொன்னுத்துரை சிவானந்தனுக்கு (6 வயது) இளம்பிள்ளை வாதத் தடுப்புச்சிகிச்சை இருதடவை செய்யப்பட்டது. பின் கால் வீங்கியது காரணமாக அவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவர் மரணமானர் மரணவிசாரணை நடத்திய அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் இயற்கை மரணமெனத் தீர்ப்பளித்தார்.

---

## சோஷலிஸமே எமது குறிக்கோள்

—என். எம்.

எட்டியாந்தோட்டை, செவ்.

ஏகாதிபத்திய வாதிகளை எதிர்த்து உண்மையான சோஷலிஸ அரசாங்கத்தை உருவாக்குவதற்காகவே இடதுசாரி முன்னணி அமைக்கப்பட்டுள்ளதாக ரங்காலையில் நடைபெற்ற லங்கா சமசமாஜக் கட்சியின் வாலிப முன்னணிக் கூட்டத்தில் பேசுகையில் டாக்டர் என். எம். பெரேரா தெரிவித்தார். அடுத்த பொதுத் தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடமில்லையென்றும் முற்போக்கு இயக்கங்கள் இடதுசாரி முன்னணிக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

---

## சகலரும் போட்டியின்றித் தெரிவு

வென்னப்புவ, புதன்

இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சரித்திரத்திலேயே முதன் முதலாக பட்டின சபை ஒன்றுக்கு சகல அங்கத்தவர்களும் ஏகமனதாக தெரிந்தெடுக்கப்பட்ட சம்பவம் நிகழ்ந்துள்ளது. அண்மையில் ஸ்தாபிக்கப்பட்ட வென்னப்புவ பட்டினசபைக்கு அதன் 5 அங்கத்தவர்களும் போட்டியில்லாமலே தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த அங்கத்தவர்கள் ஐவரும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள். என்பது குறிப்பிடத்தக்கது.

---

# ஹெயிட்டியிலிருந்து அமெரிக்கர் வெளியேற்றம்

## ஹெயிட்டியின் நிலையை ஆராய பாதுகாப்பு சபை கூடியது

லண்டன், மே 9

**டொமினிக்கன் குடியரசுக்கு எதிராக ஹெயிட்டி சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகளை ஆராயும்பொருட்டு, நேற்று பந்தோபஸ்துசபை கூடியது. இன்று ஹெயிட்டியிலிருந்து அமெரிக்கர்களை வெளியேற்றும் முயற்சியில் அமெரிக்க அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து இன்று சில அமெரிக்கர்கள் அங்கிருந்து வெளியேறினர்.**

ஹெயிட்டிக்கு எதிரான நடவடிக்கைகளில் டொமினிக்கன் குடியரசு ஈடுபட்டிருப்பது குறித்து, ஹெயிட்டியின் வெளியுறவுமந்திரி திரு. எம். ரெனி சால்மேர்ஸ் தெரிவிக்கையில், உலகத்திலேயே ஒரே ஒரு நீக்ரோ தேசமாக விளங்கும் ஹெயிட்டியை அழிக்கும் முயற்சியில் டொமினிககன் குடியரசு ஈடுபட்டிருக்கிறதென்றும், டொமினிக்கன் துருப்பினர் ஹெயிட்டி எல்லையில் இருக்கின்றனர் என்றும் கூறினர்.

இதுசம்பந்தமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

டொமினிக்கன் குடியரசு துருப்பினர் ஹெயிட்டிக்குள் ஊடுருவும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர். இதனல் உலக சமாதானத்துக்கு பெரும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. டொமினிக்கன் குடியரசின் அவசியமற்ற தலையீடுகளினலும் ஆக்கிரமிப்பினலும் உலக சமாதானத்துக்கும் பாதுகாப்புக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

### அமெரிக்கர் வெளியேற்றம்

ஹெயிட்டியில் நிலவும் மோசமான நிலைமை காரணமாக அங்குள்ள அமெரிக்கர்களை வெளியேற்றும் முயற்சியில் அமெரிக்க அரசாக்கம் இப்பொழுது ஈடுபட்டுள்ளது. ஹெயிட்டியிலிருந்து சுமார் 1500 அமெரிக்கர் வெளியேற்றப்படவிருக்கிறார்கள். அமெரிக்கர்களை வெளியேற்றும் முதல் நடவடிக்கையாக இன்று அமெரிக்கப் பிரஜைகள் சிலர் தாயகம் திரும்பினர். வெளியேற்றும் நடவடிக்கை தொடர்ந்து நடைபெறும்.

ஹெயிட்டியின் எல்லைக்குச் சமீபத்தில் ஆயிரத்துக்குமதிகமான டொமினிக்கன் துருப்பினரை ஜனதிபதி ஜுவெனியஸ் பொஸ் அனுப்பி வைத்ததைத் தொடர்ந்தே ஹெயிட்டி பாதுகாப்புசபைக்கு விண்ணப்பித்தது. ஹெயிட்டியின் விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்ட பாதுகாப்புசபை, இன்று இது சம்பந்தமாக தொடர்ந்து விவாதிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

---

# "கட்டுப்பாடுஅதிகாரி வெளியேறவேண்டும்"

—பதட்லாவோதலைவர்

## உள்நாட்டுயுத்தம் லாவோஸில் தோன்றலாமாம்

லாவோஸ், மே 9

**ஜார்ஸ் சமவெளிப் பிரதேசத்துக்குச் சென்றுள்ள சர்வதேசக் கட்டுப்பாட்டுக் கமிஷனைச் சேர்ந்த பாரத, கனடா அதிகாரிகள் அங்கிருந்து உடன் வெளியேற வேண்டும் என்று கம்யூனிஸ்ட் பதட் லாவோ தலைவர் அறிவித்துள்ளார்.**

லாவோஸ் நிலைமைபற்றி அறியும் பொருட்டு ஜார்ஸ் சமவெளிப் பிரதேசத்துக்கு சர்வதேசக் கட்டுப்பாட்டு கமிஷனைச் சேர்ந்த ஒரு கோஷ்டி சென்றது. ஆனல் இந்தக் கோஷ்டியைச் சேர்ந்த பாரத, கனடா அதிகாரிகள் உடன் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்று கம்யூனிஸ்ட் பதட் லாவோ தலைவர் ஆதரித்து லாவோஸ் நிலைமை குறித்து லாவோஸ் மன்னர் சவங்வத்தனவுடன் தலைநகரத்தில் பேச்சுகள் நடத்தலாமென்று லாவோஸ் பிரதமர் சுவர்ண பூமா விடுத்த வேண்டுகோளையும் நிராகரித்துவிட்டார்.

### பதட்லாவோ மந்திரி கருத்து

லாவோஸ் நிலைமை குறித்து பதட்லாவோ தகவல் மந்திரி திரு. பூமேவொங்விசிட் கருத்துத் தெரிவிக்கையில் லாவோஸில் உள்நாட்டு யுத்தம் தோன்றுவதற்கான அபாயம் இருப்பதாகக் கூறினர்.

### வாஷிங்டனில்

வாஷிங்டனில் நேற்று நிருபர்கள் கூட்டமொன்றில் அமெரிக்க ஜனதிபதி கென்னடி பேசுகையில், தமது விசேஷ தூதர் திரு. அவரல் ஹரிமன் லாவோஸ் நிலைமைபற்றி சோவியத் பிரதமமந்திரி குருஷ்சேவுடன் பேச்சுக்கள் நடத்தினர் என்றும் லாவோஸில் அமைதியை நிலைநாட்ட ரஷ்யா பாடுபடும் என்று குருஷ்சேவ் தெரிவித்திருந்தார் என்றும் கூறினர். லாவோஸில் சண்டைகள் நிகழ்ந்ததன் மூலம் அங்கு ஜெனிவா ஒப்பந்தம் மீறப்பட்டிருக்கிறது என்றும் அவர் கூறினர்.

### மீண்டும் ஆலோசனை

லாவோஸ் நிலைமை குறித்து பிரிட்டனுக்கும் சோவியத யூனியனுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன. சில கருத்து வேறுபாடுகள் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பிரிட்டன்-சோவியத் பேச்சுக்கள் நேற்று மீண்டும் ஆரம்பமாகின. லாவோஸ் நிலைமை குறித்து இருநாடுகளும் ஆலோசனை நடத்திவருகின்றன.

---

## சிறுமி மரணம்

மடன்வல, வியாழன்

மடன்வலவைச் சேர்ந்த 13 வயதுச் சிறுமி ஒருத்தி மருந்தென நச்சுத்திராவகத்தை உட்கொண்டதால் மரணமானள்.

---

# "மனிதனின் மனம் மாற வேண்டும்"

## செஞ்சிலுவைச்சங்க நூருவது ஆண்டுவிழாவில் ராதாகிருஷ்ணன்

### 'அழிவு எண்ணத்தை ஆக்கப் பணியால் மாற்றுவோம்'

—பிரதமர் நேரு

புதுடில்லி, மே 9

**"மனிதனின் மனம் மாறவேண்டும், மனிதத் தன்மை குடிபுகவேண்டும். எம்மிடையே தோன்றியுள்ள பகைமை மாறி, மனித சமுதாயத்தில் மறுமலர்ச்சி தோன்றவேண்டும்" என்று புதுடில்லியில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் ராஷ்டிரபதி ராதாகிருஷ்ணன் பேசுகையில் கூறினர்.**

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நூருவது ஆண்டு விழாவை பாரதம் உள்ளிட்டு சுமார் 90 நாடுகள் நேற்று கொண்டாடின. நூருவது ஆண்டுவிழாவை முன்னிட்டு புதுடில்லியில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில்தான் இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: "இந்த அணுசக்தி யுகத்தில் மனிதன் எப்படி வாழவேண்டும் என்பதை இன்னும் சரிவர கண்டுபிடிக்கப்படவில்லை, உலகத்தில் போட்டியும் பூசலும் அதிகரித்துள்ளது. மனிதனின் மனம் மாறவில்லை. இசனல் அவன் நன்மை தீமைகளை நன்குணராது கருணையுள்ளம் இல்லாதவனக வாழ்கின்றன் இது மாறவேண்டும்.

சமுதாயத்தில் மறுமலர்ச்சி காண்பதற்கு மனிதனின் மனம் மாறவேண்டும். அவனின் இதயத்தில் குடிகொண்டிருக்கும் தீய ஆசைகளும் பகைமைகளும் மறையவேண்டும். மனிதன் கருணையுள்ளவனக மாறி உலக நலனுக்கு பாடுபடல் வேண்டும்.

செஞ்சிலுவைச் சங்கங்களின் தொண்டு அளப்பரியது. இயற்கையாக நிகழும் விபத்துக்களிலும் மற்றும் எல்லைச் சண்டைகளிலும், செஞ்சிலுவைச் சங்கத்தினர் அருந்தொண்டாற்றியிருககின்றார்கள்".

### பிரதமர் நேரு

புதுடில்லியில் நடைபெற்ற கூட்டத்தில் பாரதப் பிரதமர் திரு. நேரு பேசுகையில், செஞ்சிலுவைச் சங்கங்கள் ஆக்கப் பணிகள் ஆற்றுகின்றன என்று கூறினர்.

அவர் தொடர்ந்து பேசியதாவது: "உலகம் இன்றுமீளாத் துயரில் மூழ்கியிருக்கின்றது. உலகத்துயரைத் துடைப்பதில் சகோதர நாடுகள் முன்வரவேண்டும். அழிவு எண்ணத்தை ஆக்கப்பணியால் மாற்ற வேண்டும். உலகில் சமாதானம் நிலைப்பதற்கு எல்லா நாடுகளும் முயற்சியெடுக்க வேண்டும். அதற்கு உலக மக்களிடையே ஒற்றுமையும் ஒத்துழைப்பும் இருக்கவேண்டும்."

### மணி வாக்கு

அநியாயமான சட்டங்களுக்கு மனிதர் பணிய வேண்டும் என்ற மூடநம்பிக்கை இருக்கும் வரையில் அவர்களுடைய அடிமைத்தனமும் இருந்து கொண்டுதான் வரும். சாத்துவீக எதிர்ப்பாளர் ஒருவர் மட்டுமே அத்தகைய மூடநம்பிக்கையை நீக்க முடியும்.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு

EELANADU: National Tamil Daily ; Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம்சோபகிருது ஆண்டு
சித்திரை மீ 27 உ (10-5-63)

## பார்லிமெண்ட் கூட்டம்

பார்லிமெண்ட்சபைக் கூட்டத்தை சமார் மூன்று மாதங்களுக்கு ஒத்தி வைத்தது, சபை முதல்வர் கூறுவது போல் சட்டப்படி தவறில்லாததாக இருக்கலாம். என்ருலும் எதிர்க்கட்சிகளைக் கலந்து கொண்டு அவர்களது சம்மதம் பெருமல், அரசாங்கக் கட்சியினர் இந்த முடிவு செய்தது தான் ஜனநாயக முறைக்கு மாருனதாகும்.

எதிர்க்கட்சியினர் இதுபற்றி கலவரமடைய எவ்வித காரணமுமில்லை என்கிருர் சபை முதல்வர். இவ்விஷயமாக கவர்னர்ஜெனரலுக்கு யோசனை கூற பிரதமருக்கு அதிகாரமுண்டென்றும், இவ்விஷயமாக மந்திரிசபையையோ எதிர்க்கட்சிகளையோ கலந்து யோசிக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்த எவ்வித சட்டமுமில்லை என்றும் வாதிக்கிருர் அவர். அவ்வித சட்டம் எதுவும் இல்லாதிருப்பது உண்மையே. ஆனல் ஜனநாயக முறை இங்கு வெற்றிபெற வேண்டுமாயின், எதிர்க்கட்சி மெம்பர்களும் மக்களின் பிரதிநிதிகளே என்பதை மறக்காமல் அவர்களையும் கலந்து யோசித்து இவ்வித முக்கியமான காரியங்களை அரசாங்கம் செய்ய வேண்டும்.

ஜனநாயகமென்பது என்ன? 51 பேர் சேர்ந்து 49 பேர்களை அடக்கி ஆள்வதா? அது பெரிய கொடுமையாகுமென்றும் தனிப்பட்ட ஒவ்வொருவருடைய நலஉரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டியதே ஜனநாயகமென்றும் கூறினர் மகாத்மாகாந்தியடிகள். ஆனல் இலங்கையிலே சென்ற 15 ஆண்டுகளாக ஜனநாயகம் என்பது, பெரும்பான்மைக் கட்சிக்குள்ளாக இருக்கும் ஒரு பெரும்பான்மைக்குழு செய்யும் முடிவின்படியே நடந்துவந்துள்ளது. எதிர்க்கட்சிகள் பலமாக எதிர்த்தும்கூட, மனித உரிமைகளைப் பறக்கடிக்கக் கூடிய பல சட்டதிட்டங்களும் கேவலம் ஒருசில அதிகப்படி வாக்குகளால் நிறைவேற்றப்பட்டு அமுலுக்கும் வந்துள்ளன. இன்று இலங்கை அரசியலில் அமைதி குலைந்து நாடு முன்னேற முடியாமல் முட்டுக்கட்டையான நிலை ஏற்பட்டுள்ளதற்கு இது ஒரு முக்கிய காரணமாகும்.

இந்த அவலநிலை மாறி, இலங்கையில் ஜனநாயக தர்மம் தழைக்கவும் மக்கள் திருப்தியாகவும் சுபிட்சமாகவும் வாழவும் வேண்டுமாயின், அரசாங்க கட்சியினர், எதிர்க்கட்சிகளுடன் நெருங்கிய நல்லுறவு கொண்டு காரியங்களைச் செய்ய வேண்டும். எதிர்க்கட்சியினரை அரசாங்கம் தனது எதிரிகளாகக் கருதுவது தகாது. அவர்களும் பல்லாயிரக்கணக்கான மக்களின் ஆதரவைப் பெற்று, பிரதிநிதிகளாக வந்தவர்கள். அவர்களை அவ்விதமே மதித்து, அவர்களது ஒத்துழைப்பையும் நல்லுறவையும் எவ்வளவுதூரம் அரசாங்கம் பெற முடிகிறதோ அவ்வளவும் இங்கு ஜனநாயக ஆட்சி வெற்றிபெறவும், நாடு அமைதியாக சுபிட்சபாதையில் முன்னேறவும் முடிவதாக இருக்கும்.

# "அரசியலில் எல்லோரும் ஈடுபடவேண்டும்"

## தமிழ்க்காங்கிரஸ் கிளை திறப்புவிழாவில் பேச்சு

மீசாலை, வியாழன்

"தமிழரசுக் கட்சியினர் கடந்த சிலவருடங்களாக, திட்டங்கள் போட்டு செயலாற்றிவருகிருர்கள். அவர்களின் முயற்சியால் ஒரு பயனையும் இதுவரை தமிழ்ப்பேசும் மக்கள் அடைந்துவிடவில்லை. இனிமேலும் அடையபோவதில்லை. பலதடவை பயனற்றுப்போன திட்டங்களை, மீண்டும் செயல்முறைக்கு கொண்டுவருவதால் ஏதாவது பயனுண்டா?" என்று மீசாலை வடக்கு தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணிக் கிளையை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசிய போது, முன்னுள் உதவி அரசாங்க அதிபரும், வடமாகாண தமிழ் காங்கிரஸ் தலைவருமாகிய திரு. ஏ. தட்சணமூர்த்தி கூறினர்.

திரு. தட்சணமூர்த்தி தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

அரசியல் விஷயம் சிலருக்கு பிடிக்காது. அரசியல் என்றதும் போட்டி என்று கருதுகிருர்கள். உண்மையில் உலகத்தில் அரசியல் எல்லா விஷயங்களிலும், முக்கியமானதென்பதை காண்கிறேம். அதுவும் முடியாட்சி, மறைந்து குடியாட்சி உதயமாகும் இந்தத் திருப்பத்திலே ஒவ்வொருவரும் கட்டாயமாக அரசியலில் ஈடுபடவேண்டும். பாரதியார் எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்று கூறியது, எல்லோரும் அரசியலில் பங்கு கொள்ளவேண்டும், அது அவர்களது கடமை என்பதை எடுத்துக்காட்டவே. அரசியலில் ஈடுபடாதவர்கள் கடமையில் தவறியவர்களாவார்கள். அரசியலில் ஈடுபடும் அதே வேளையில் சட்டத்திற்கும் மதிப்பு கொடுக்கவேண்டும். ஆசிரியர்களும், அரசாங்க உத்தியோகத்தர்களும் நேரடியாக அரசியலில் இறங்கமுடியாமல், சட்டம் தடை செய்தாலும், அனுதாபத்தையாவது ஒரு கட்சிக்கு அளிக்கலாம்.

தமிழர்களின் நிலைமை வரவர மிகவும் மோசமாகிவருகிறது. ஆங்கிலம் கற்ற தமிழர்கள், அரசாங்க சேவையில் அதிகமாக ஈடுபட்டார்கள். இலங்கையில் மட்டுமன்றி மலேயா சிங்கப்பூர் போன்ற இடங்களுக்கும் சென்று உத்யோகம் பார்த்தார்கள். இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தபின் வேற்றுமை தலைதூக்கியது. சிங்கள மக்கள் ஜனத்தொகையில் அதிகமாயிருந்தும், உத்தியோகத்தில் தமிழர்கள் அதிகமாயிருப்பதாக கருதினர்கள். காலஞ்சென்ற பண்டாரநாயக்காவே, மாத்தறையில் ஒரு கூட்டத்தில் பேசும் போது, இங்குள்ள அரசாங்க அதிபர் ஒரு சிங்களவரில்லை. நீதிபதி ஒரு சிங்களவரில்லை. உதவி அரசாங்க அதிபரும் அப்படித்தான். கச்சேரி தலைமை அதிகாரிகூட சிங்களவரில்லை என்று கூறி சிங்களவர்களை தட்டி எழுப்பினர்.

டொனமூர் அரசியல் திட்டம் வந்தபொழுது 1931-ம் ஆண்டுக்குப் பின் இலவசக் கல்வியின் காரணமாக சிங்களவர்கள் நன்ருக ஆங்கிலம் கற்றுவந்தார்கள். அதன்பின் உத்தியோகம் எடுக்கத் தொடங்கினர்கள். சிங்களவர்களில் சில தீவிரவாதிகள், மக்களின் மனதை குழப்பி பதவிக்கு வர ஆசைப்பட்டார்கள். வகுப்புவாதம் மூலமே சுலபமாக ஆட்சியைக் கைப்பற்றலாம் என்பதை அறிந்தார்கள். சிங்கள மொழிக் கூச்சலை ஆரம்பித்தார்கள். காலஞ்சென்ற பண்டாரநாயக்காவே சிங்களத்தை 24 மணி நேரத்தில் ஆட்சி மொழியாக்குவதாகக் கூறினர். சிங்களம் மட்டும் கூச்சலுக்கு ஆதரவு பெருகுவதை அறிந்த யு. என். பியும் அதேபாட்டை வேருெரு ராகத்தில் பாடத் தொடங்கினர்கள். இதனல் தமிழருக்கு பேரிடி ஆரம்பமானது.

அந்தப் பேரிடியை தங்களுக்கு சாதகமாக்கிக்கொண்டு, தங்கள் கட்சியை வளர்க்க சமஷ்டியினர் முற்பட்டனர். இணைப்பாட்சிதான் சமஷ்டி. இரண்டாக இருப்பவர்கள் ஒன்ருக சேருவதுதான் சமஷ்டி. சிங்கள மக்கள் விரும்பாமல் சமஷ்டி கிடைக்குமா? பாராளுமன்றத்தில் அதிகமான வாக்கு கிடைக்குமா? எந்தச் சிங்களத் தலைவர்களும் சமஷ்டியை ஆதரிக்கவில்லை. அவர்கள் சமஷ்டியென்றதும் பயப்படுகிருர்கள். ஒரு காலத்தில் தமிழர்கள் தென்னிலங்கையை வெறுத்து தென்னிந்தியாவுடன் சமஷ்டி ஆட்சி ஏற்படுத்திவிடுவார்களோ என சந்தேகப்படுகிருர்கள்.

சம அந்தஸ்துடன் சமஷ்டியையும் ஒன்ருக கலப்பதால்தான் சிங்கள மக்கள் சந்தேகப்படுகிருர்கள். சமஷ்டியை ஒதுக்கிவைத்துவிட்டு, சம அந்தஸ்துக்கு பாடுபட்டால் பலன் கிடைக்கும்.

பண்டா-செல்வநாயகம் ஒப்பந்தத்தில், இலங்கை முழுவதும் சிங்களத்தை அரசாங்க மொழியாக ஏற்றுக்கொள்ளுகின்ருேம். ஆனல், வடக்கு கிழக்கு மாகாணங்களில் மட்டும், தமிழுக்கும் இடம்தர வேண்டுமென்று தமிழரசுவாதிகள் கையெழுத்து போட்டார்கள். தமிழ் காங்கிரஸ் கேட்பது, இலங்கை முழுவதும் தமிழுக்கும் சம அந்தஸ்து. ஜனத்தொகையிலோ, நிலப்பரப்பிலோ சம அந்தஸ்து இல்லை. சிங்களவருக்கு உள்ள உரிமைகள் தமிழர்களுக்கும் இருக்கவேண்டும், இலங்கை

(5-ம் பக்கம் பார்க்க)

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த முதுதமிழ்ப் புலவர் திரு. மு. நல்லதம்பி அவர்களின் நினைவுதினம் 8-5-63 ஆகும். சிறந்த கவிஞராகவும், தலைசிறந்தபேச்சாளராகவும், நடிகராகவும் இவர் திகழ்ந்தார். முத்தமிழிலும் உள்ள புலமையைக் கண்ட தென்னிந்திய தமிழ்ச்சங்கத்தார் அவருக்கு 'முதுதமிழ்ப் புலவர்' என்ற சிறப்புப் பட்டத்தை வழங்கினர். மரதன் கவிதைப் போட்டியில் பரிசுபெற்ற இவர் புகழ் ஓங்கிவரும் நேரத்தில் காலன் அவரைக் கவர்ந்துசென்றுவிட்டான். பல பாடப்புத்தகங்களின் நூலாசிரியராகவும் இவர் விளங்கினர். யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழ்விழாவில் இவரின் பேச்சைக்கேட்ட சொல்லின் செல்வர் அமரர் சேதுப்பிள்ளையே இவரைப்பாராட்டினர். அந்தப்பேச்சே கடைசிப்பேச்சாகவும்அமைந்துவிட்டது. அத்தகையசிறந்த தமிழறிஞரின் ஞாபகமாக இக்கவிதையை இங்கு வெளியிடுகின்ருேம்.

## முதுதமிழ்ப் புலவர்

### ஆசிரியப்பா

பொன்னகர் போற்றும் மன்னும்யாழ்ப் பாண
நன்னகர் தன்னிற் றன்னிக ரில்லா
வட்டுக் கோட்டையில் வந்தவ தரித்த
மட்டிலாப் புகழ்கொள் முதுதமிழ்ப் புலவோய்!
இருபத்தெட் டாண்டுக ளின்புடன் கொழும்பில்
மருவும் "ஸாகிரா வித்தியா லயந்"தினில்
தலைமைத் தமிழா சிரியனு யமர்ந்தனை!
கலையெனும் நீரினைக் கரவிலா திறைத்தனை!
பற்பல முஸ்லீம் மாணவப் பயிர்களை
நற்பெரும் விளைவினை நண்ணிட வைத்தனை!
எத்தனை யோபல வித்தக ரெழுதிய
அத்தனை கவியினு மருங்கவி யாக்கி
மரதன் கவிதைப போட்டியிற் புலவ! நீர்
சிறந்தமு தற்பரி சாயிரம் பெற்றனை!
தென்னிந்தி யாவொடு துன்னிய தொடர்பினை
நன்மன தொடுநீ நேயமாய் வைத்தனை!
தென்னிந் தியதமிழ்ச் சங்கமும் நின்னுடை
நுண்ணிய புலமையை யெண்ணியாய்ந் தலவோ
"முதுதமிழ்ப் புலவர்" என்றமா பட்டமும்
மதிவல்லான நுமக்கே மாண்பொடீந் ததுவே!
சென்றசில் லாண்டுமுன் தமிழ்விழா வதனில்
சிறந்தசொற் பொழிவும் நிகழ்த்தினை ஐய!
மண்ணவ ரெல்லாங் கண்ணிய முடன்வந்
தெண்ணிலா மதிப்பினை நின்னிடஞ் செலுத்த,
மாணவ ரெல்லாம் விளங்கிடா வையம்
நின்பா லேகி நிவிர்த்திசெய் தேகினர்!
ஈழந் தொட்டகல் இந்தியா வரைக்குஞ்
சூழ நின்புகழ் திசைதொறும் பரவி
வானுற வோங்கி வளம்பெற வளரப்
"பானுவே!" என்று பாவலர் போற்றினர்!
இன்னவா றுன்புக ழிருந்தமி ழுலகெலாஞ்
சொன்னவா றிருக்கச் செந்தமி வித்தகக்
கொற்றவா! நீயுங் குவலயம் விடுத்தே
மற்றவன் திருவடி மகிழ்வொடன் றேகினை!
ஈழமும் நின்போல் முதுதமிழ்ப் புலவனை
என்றுகொல் பெறுமோ! இனியபா வலனே!!

—கவிஞர், மு. க. சூரியன், கோப்பாய்.

## ஐயாறன் எழுதுவது

கொழும்பிலே வெசாக் பெருநாளன்று மாலையில் மழை பெய்யுமென்றும், அதனல் வேடிக்கை பார்க்க வெளியில் செல்லுபவர்கள் குடைகளை எடுத்துச் செல்வது நல்லதென்றும், அவதானநிலைய அதிகாரி யோசனை கூறியிருந்தார். ஆனல் பெருங்கூட்டம் வந்திருந்ததெனினும் யாரும் குடைகொண்டு வரவில்லை. மழையும் வரவில்லை. நல்ல நிலவு. பூரணசந்திரன் வானத்திலே அழகாகவந்து வெளிச்சம்காட்ட, மக்கள் எவ்வித சாதி, மத வேற்றுமையுமின்றி, வெசாக் பந்தல்களையும், அழகான காட்சிகளையும் மகிழ்ச்சியுடன் கண்டுகளித்தனர்.

கூட்டம் சில இடங்களிலே மிக அதிகமாக இருந்தது. பஸ்ஸுகளும் கார்களும் தடைபட்டுநின்றன. நெருக்கம் சில பகுதிகளில் அதிகமிருந்தும், எவ்வித அசம்பாவிதமுமேற்படவில்லை. மக்கள் மிக அமைதியாக நடந்துகொண்டனர். பொலிசார் ஆங்காங்கே இருந்து எவ்வித அதிகாரமும் செய்யாமல், அமைதியாகக் கடமையாற்றியது குறிப்பிடத்தக்கது.

வெசாக் தினத்தில் பொலிசார் பொதுமக்களிடம் அதிக மரியாதை காட்டவேண்டுமென்பது மேலிடத்து உத்தரவாம். வருடத்தில் எல்லா நாட்களிலும் இதேமாதிரி பொலிசார் நடந்துகொள்ளக் கூடாதா?

* * *

ரயில்வே ஸ்டேஷன்கள் பலவற்றையும் வெசாக் விளக்குகளாலும், பௌத்தகொடிகளாலும் அலங்கரித்திருந்தார்கள். என்ருலும் அநுராதபுரம் முதலிய பெரிய ஸ்டேஷன்களிலும் தாகத்துக்குத் தண்ணீர் கொடுக்கவும் ஆளில்லை. கோடைகாலம். ஒரே தாகம். 50 சதம் கொடுத்து ஆரஞ்சுபார்லிதான் குடிக்க வேண்டும். ரயில்பாதையின் இருபுறங்களிலும் தென்னந்தோப்புகள் ஏராளமாக இருந்தும், எந்த ஸ்டேஷனிலும் இளநீர் விற்கக்காணேம். பொல்காவலையில் மட்டுமே இரண்டொருவர் விற்றனர்.

கோடை காலத்திலே எல்லா ரயில்வே ஸ்டேஷன்களிலும் பிளாட்பாரத்திலே குடிதண்ணீரை பிரயாணிகளுக்குக் கொடுக்க இந்தியாவில் ரயில்வே நிர்வாகத்தினர் ஆட்களை நியமித்திருக்கிருர்கள். அவ்விதம் இலங்கை ரயில்வேஸ்டேஷன்களிலும் செய்யக்கூடாதா?

ரயிலில்தான் குடிதண்ணீர் கிடையாது. முக்கிய ஸ்டேஷன்களிலாவது இவ்வித சேவையைச்செய்யவேண்டியது ரயில்வே நிர்வாகத்தின் முக்கிய கடமையாகும். இதற்கு ரயில்வேயிடம் பணமில்லாவிடில், ஆங்காங்கே சிரமதான தொண்டர்களைக்கொண்டு இந்தச் சேவையைச் செய்யலாம். எப்படியும் இக்கோடையிலே தாகத்துக்குத் தண்ணீர் கொடுக்காமல் பிரயாணிகளைத் தவிக்கவிடுவது, ரயில்வே நிர்வாகம் பிரயாணிகளுக்குச் செய்யும் பெருங்கொடுமையும் பாவமுமாகும்!

* * *

ரயில்வேயில் 'குருமார்களுக்கு மட்டும்' என்று சில இடங்களை ஒதுக்கியுள்ளனரல்லவா? அதில் ஓர் இஸ்லாமிய போதகர் அமர்ந்து பிரயாணம் செய்தாராம். பின்னர் வேருெரு ஆசாமி அவர் பக்கத்தில் அமர்ந்து புகைவிட்டதும், அந்தப் போதகர் ஆட்சேபித்ததாயும், பயனில்லாது பேச்சுதடிக்கவே, போதகர் அபாயச் சங்கிலியை இழுத்து ரயிலை நிறுத்தி, பின்னர் அந்த ஆசாமியை அகற்ற வேண்டி ஏற்பட்டதாகவும் ஒரு கதை கேள்விப்பட்டேன். எல்லாச் சமயத்திலும் குருமார்கள் உண்டு. அந்த ஆட

(5-ம் பக்கம் பார்க்க)

# 'கவனமாகப் போகும்படி தம்பி என்னை எச்சரித்தார்'
## சிறுவனின் மரணவிசாரணையில் 12 வயதுச் சகோதரி சாட்சியம்

மாவிட்டபுரம், வியாழன்
யாழ்ப்பாணம் - காங்கேசன் துறை வீதியில், யாழ்ப்பாணத்திலிருந்து மூன்ருவது மைலில் (கொக்குவில்) கோண்டாவிலைச் சேர்ந்த 9 வயதுள்ள குமாரசாமி பாக்கியநாதன் என்ற சிறுவன் காரினுல் மோதுண்டு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு மரணமானதையொட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம், ஸ்தலத்திலும், யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலும் மரண விசாரணை நடத்தினர். காரைச் செலுத்திய மயிலிட்டியைச் சேர்ந்த சின்னத்துரை பொன்னம்பலத்தின் நலன்களைக் கவனிக்க வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜராகியிருந்தார்.

காலஞ் சென்றவரின் சகோதரியான குமாரபாக்கியம் (வயது 12) சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

"நான் கொக்குவில் இந்துக் கல்லூரியில் கல்வி கற்கிறேன். கோண்டாவிலில் வசிக்கிறேன். இறந்தவர் எனது தம்பி. நானும் தம்பியும் காலை 10 மணியளவில் அரிசி வாங்க ஒரு அரிசி மில்லுக்குச் சென்ருேம். நாங்கள் யாழ்ப்பாணம்-காங்கேசன்துறை ரோட்டில் யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லும் ரோட்டின் இடப்பக்கமாகச் சென்ருேம். நான் இடப்பக்க கரையிலும் தம்பி எனக்கு வலப்பக்கத்திலும் வந்தார். நாங்களிருவரும் ஒரு இரட்டை மாட்டு வண்டிலுக்குப் பின்னுல் வண்டிலைப் பிடித்துக்கொண்டு சென்ருேம். அப்படிச் செல்லும் போது மதவுகளுக் கிட்டடியில் தம்பி என்னை நோக்கி "அக்கா கார் வரும் கவனமாக வா" என்று என்னை எச்சரித்துவிட்டு வண்டிலுக்கு வலப்பக்கத்தால் கார் வருகிறதா என்று எட்டிப் பார்த்தார். அச்சமயம் திடீரென வந்த கார் தம்பியின் தலையில் அடித்தது. சாரதியை எனக்குத் தெரியாது. கார் இலக்கமும் தெரியாது. நான் குழறினேன். கார் நிற்பாட்டப்பட்டது. கரத்தை நின்றுவிட்டு போய்விட்டது. கார் யாழ்ப்பாணத்தில் இருந்து காங்கேசன்துறையை நோக்கி வந்தது.

கந்தையா மளவராய முதலி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

நான் தாவடியில் இருக்கிறேன். சம்பவம் நடந்த இடத்திற்குப் பக்கத்தில் ஒரு செத்த வீடு. அதற்காக அங்கு வந்தேன். ஒரு இரட்டை மாட்டு வண்டி அந்த வழியால் வந்தது. நான் வண்டிலுக்கு வலது புறத்தில் நின்றேன். கார் ஒன்று அதிவேகமாக காங்கேசன் துறையை நோக்கி வந்தது. வண்டிலுக்குப் பின்னுல் வந்த சிறுவன் வெளியில் எட்டிப் பார்த்ததும் கார் அவரை அடித்தது. நான் விபத்தை 100 யார் தூரத்தில் நின்று பார்த்தேன். காரில் ஆட்கள் இருந்தார்கள். நான் காலஞ்சென்றவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றேன். அப்போது உயிர் இருந்தது.

நீதிபதி, மேல் விசாரணையை இம்மாதம் 21-ம் திகதிக்கு ஒத்திவைத்து சாரதியை 2000 ருபா பிணையில் செல்ல உத்தரவிட்டு காரை மோட்டார் கார் பரிசோதகரின் பரிசோதனைக்குப்பின் சொந்தக்காரருக்குக் கொடுக்க உத்தரவிட்டார்.

## பௌத்தர்கள் ஒன்றுபடவேண்டும்

மொரட்டுவை, வியாழன்
"பௌத்தர்களிடையே ஒற்றுமைவேண்டும். நம்மிடையே ஒற்றுமையில்லாததால் தான் பௌத்தர்கள் அல்லாவதவர்கள் பௌத்தர்களுடைய உரிமைகளை மறுப்பதற்கான இயக்கங்களை நடாத்திவருகிருர்கள்" என்று செனட்டர் தோமஸ் அமரசூரியா மொரட்டுவ பௌத்த இளைஞர் சங்க வெசாக் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார்.

## பாலத்துக் கருகில் பெண்ணின் சடலம்

பழநி, மே 9
பழநி ரயில் நிலையத்திற்கு அருகேயுள்ள பாலத்துக்கு அடியில் குத்துக்காயங்களுடன் பெண்ணின் சடலம் ஒன்று கிடக்கக்கண்டுபிடிக்கப்பட்டது. இது பற்றித் துப்புத்துலக்கி பொலிஸ் நாய்களான மிணு, யுவராணி ஆகியன இரண்டும் கொண்டுவரப்பட்டன.

பிரேதம் கிடந்த இடத்திலிருந்து மோப்பம் பிடித்த இந்த நாய்கள் அருகே இருந்த மலபார் பொலிஸ் கோஷ்டி முகாமிற்குச் சென்ற இரு பொலிஸ்காரர்களை மோப்பம் பிடித்துக் கொடுத்துள்ளது. இச்சம்பவம் நகரில் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பாலத்திற்கு அடியில்கிடந்த பெண் பிச்சை எடுப்பவள் என்றும் வலது கண் குருடி என்றும் கள்ள நட்புக் காரணமாக இந்நிகழ்ச்சி ஏற்பட்டிருக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

## குடும்பமே தற்கொலை

பழநி, மே 9
இரண்டு பெண் குழந்தைகளுடன் தாய் ஒருவர் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்துகொண்டார். குழந்தைகளின் தந்தை வீட்டில் சுருக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார்.

இச் சம்பவம் பற்றித் தெரிவிக்கப்படுவதாவது:- பழநி அருகேயுள்ள கோதை மங்களத்தில் வேலுச்சாமிக் கவுண்டர் என்பவர் வசித்து வந்தார். அவர் இரு பெண்குழந்தைகளுடன் உள்ள பாப்பம்பாள் என்பவரைத் திருமணஞ் செய்துகொண்டார். அவர்களுள் மனத்தகராறு ஏற்பட்டதால் பாப்பம்பாள் தமது குழந்தைகளான பழனியம்மாள் புஷ்பவதி ஆகியோருடன் கிணற்றில் வீழ்ந்து தற்கொலை செய்துகொண்டார். கணவர் வேலுச்சாமிக் கவுண்டர் வீட்டில் சுருக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார். பழனி பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## வீடமைப்பு விசேஷ கமிட்டி சிபார்சு

கொழும்பு, வியாழன்
நாட்டின் எந்தப் பாகத்திலும் வசிப்பதற்கல்லாத கட்டடங்களை பத்து வருடகாலத்திற்கு அனுமதிபெருமல் கட்டக்கூடாதென்று வீடமைப்பு விசேஷ கமிட்டி சிபார்சு செய்துள்ளது.

கமிட்டியின் அறிக்கை அடுத்தவாரம் அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

வசிப்பதற்கல்லாத கட்டிடங்களுக்குள்ள கட்டுப்பாடு, வீட்டுத்தட்டுப்பாடு நிறைவேறும் வரை தொடர்ந்திருக்க வேண்டுமென கமிட்டி வற்புறுத்தியுள்ளது.

1953-ம் ஆண்டு சிபார்சு செய்யப்பட்ட வாடகை கட்டுப்பாட்டின்படி, வர்த்தக நிலையங்கள் வீடுகள் ஆகிய இரண்டிலும் ஏராளமான மக்கள் வீடுகளுக்குப் பதிலாக வர்த்தக நிலையங்களையே கட்டியிருக்கிருர்கள் என்ற கருத்தை கமிட்டி கொண்டுள்ளது.

கமிட்டி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது: காலத்தில் வர்த்தக கட்டடங்களுக்கு கட்டுப்பாடு இருந்தால் மக்கள் வசிப்பதற்கு போதியளவு வீடுகள் ஏற்படும். வசிப்பதற்கல்லாத கட்டடங்களுக்கு தேவையான தளபாடங்கள் வழங்குவதில் கடுமையான கட்டுப்பாடு இருக்கவேண்டுமென்றும் முக்கிய கட்டடங்களுக்கும், சன சமூக கட்டடங்களுக்கும், கைத்தொழிற் கட்டடங்களுக்கு மட்டுமே தளபாடங்கள் வழங்க அனுமதியளிக்கப்படவேண்டுமென்றும் [illegible] சிபார்சு செய்துள்ளது.

## சீனி வந்தது!

கொழும்பு, வியாழன்
அரிசி, சீனி, மாவு முதலியன கொழும்புத் துறைமுகத்தில் தங்கிநிற்கும் கப்பல்களில் இருந்து இறக்கவேண்டியுள்ளது. இவ்விதத்தில் 85,000 தொன் உணவு வகைகள் கப்பலில் இருந்து இறக்கப்படவேண்டியுள்ளது. இப்பொழுது துறைமுகத்திலிருக்கும் ஆறு கப்பல்களிலிருந்து 35,000 தொன் அரிசியும், 10,000 தொன் மாவும், 15,000 தொன் சீனியும் இறக்கப்படுகின்றன. துறைமுகத்துக்கு வெளியே 10,000 தொன் சீனி கொண்டுவந்துள்ள கப்பல் ஒன்று நிற்கிறது.

## திறைசேரி கோரிக்கை

கொழும்பு, செவ்வாய்
சகல தொழில்நுட்ப உதவித் திட்டங்களில் இலங்கையிலுள்ள நிபுணர்களின் சேவையை நீடிக்க அதிக அக்கறை எடுக்கும்படி அரசாங்க இலாகாக்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

திறைசேரி, நிதிபகுதி கட்டுப்பாட்டு அதிகாரி திரு. ஏ. எல். பெரேராவால் நிரந்தரக் காரியதரிசிகளுக்கு அனுப்பப்பட்ட சுற்றறிக்கையில் இந்த அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிபுணர்களின் சேவையை நீடிக்கும்படி இலாகாக்களினுல் கோரப்பட்டுள்ளதாக சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி, வியாழன்
சாவகச்சேரி தெற்கு இந்தியடி வினயகராலய முன்றலில் அமைக்கப்பட்ட விசேட பந்தலில் சித்திரகுப்தர் விரதமும் அன்னதானமும் நடைபெற்றது.

## "அரசியலில் . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் எங்கிருந்தாலும், தமிழில் எழுதும் கடிதத்தற்கு தமிழில் பதில் கிடைக்கவேண்டும். நாங்கள் மீண்டும் 1956-க்கு முன்பு இருந்தநிலையைப்பெற வாலிபர்கள் முன்வரவேண்டும்.

ஒன்பது பேர்கொண்ட நிர்வாகசபை தெரிவுசெய்யப்பட்டது.

தலைவர்: சின்னத்தம்பி கார்த்திகேசு, காரியதரிசி: பொன்னம்பலம் சிற்றம்பலம், உதவி காரியதரிசி: தம்பிஐயா ஏரம்பமூர்த்தி, தனதிகாரி: இராசரத்தினம் பரமேஸ்வரன், பரிசோதகர்: ரீ. இரத்தினசிங்கம். முத்துபொன்னையா, கே. வயிரமுத்து ஆர். மவுலேஸ்வரன், பீ. துரைராசா ஆகியோர் நிர்வாகசபை அங்கத்தவர்களாக தெரிவுசெய்யப்பட்டார்கள்.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மும் சலுகைகளும் பௌத்த குருமார்களுக்கு மட்டுமன்றி எல்லாச் சமயபோதகர்களுக்குமென்பது சிலருக்கு விளங்காததுதான் இவ்வித சங்கடங்களுக்குக் காரணம்.

* * *

மாசில் வீணையும் மாலை
மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள
வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும்
போன்றதே
ஈசனெந்தை இணையடி
நீழலே.

— அப்பர் சுவாமிகள்.

## நியமனம் இல்லை

எருக்கலம்பிட்டி, வியாழன்
எருக்கலம்பிட்டி மத்தியமகா வித்தியாலயத்தில் கடமையாற்றி வந்த வர்த்தக ஆசிரியர் தமது பதவியைவிட்டு விலகி இரண்டு வருடகாலமாகியும் இதுவரைக்கும் வர்த்தக ஆசிரியர் நியமிக்கப்படவில்லை. இவ்விஷயமாக அரசினர் நடவடிக்கை எடுக்காததையிட்டு ஆட்சேபம் தெரிவித்து கல்லூரி பெற்ருர்-ஆசிரியர் சங்கம், பழைய மாணவர் சங்கம் உட்பட மன்னுர் எம். பி. திரு. வீ. ஏ. அழகக்கோன் ஆகியோருட்பட கல்வி அமைச்சருக்கும், வித்தியாதிபதிக்கும் அவசரக் கடிதங்கள் அனுப்பி வைத்துள்ளனர். அக்கடிதத்தில் உடனடியாக வர்த்தக ஆசிரியரை நியமிக்கும்படி கோரப்பட்டுள்ளது.

## அரசினர் தமிழ் ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி
அரசினர் தமிழாசிரியர் சங்கத்தின் மூன்ருவது ஆண்டு நிறைவு விழா யாழ்ப்பாணம் பாரதி பாஷா வித்தியாலயத்தில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. எஸ். தியாகராசா, செயலாளர்: திரு.எஸ். செல்லத்துரை, பொருளாளர்: க. கணபதிப்பிள்ளை, உபதலைவர்கள்: திருவாளர்கள் திரு. ப. சிவசுப்பிரமணியம், மு. வேலுப்பிள்ளை, உபசெயலாளர்: திரு. மு. சின்னையா. நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

இச் சங்கத்தின் வடபிரதேசக்கிளையின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: திரு. க. செல்லையா, உபதலைவர் திரு மு சின்னையா, செயலாளர் மு வேலுப்பிள்ளை, தனதிகாரி திரு. த. நடராசா. நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

பின்வரும் சில பிரேரணைகள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

30 வயதுக்குட்பட்ட பெண் ஆசிரியர்கள், பயிற்சிக்கால முடிவில் அவரவர்களின் சொந்தக்கிராமங்களில் கடமைபுரிய நியமிக்க வேண்டும். யாழ்ப்பாணத்தில் 4 வருடம் பூர்த்தி செய்யாமலே வெளியிடங்கட்கு மாற்றப்பட்டவர்கள் 15 வருடங்களுக்கு மேல் வெளி மாவட்டத்தில் சேவை செய்திருப்பின் யாழ்ப்பாணத்துக்கு மாற்றப்படவேண்டும். சிரேஷ்டதராதரப்பத்திர வகுப்புகளுள்ள சகல பாடசாலைகட்கும் பாடசாலைத் தரம் பார்க்காது, பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்படவேண்டும்.

## மாட்டுவண்டி சவாரிப்போட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி
நீர்வேலி ஸ்ரீ விநாயக வாசிகசாலை சன சமூக நிலையத்தின் 20-வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியும் மரதன் ஓட்டப்போட்டியும் நடத்தப்பட விருக்கிறது.

இம்மாதம் 26-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கும் இப்போட்டிகளுக்கு கோப்பாய் காரியாதிகாரி திரு என். வேதாரண்யசேயோன் தலைமைவகிப்பார். யாழ்ப்பாணம் உதவி பொலிஸ் அதிபர் திரு. ஏ. எஸ். மரியநாயகம் போட்டியில் வெற்றியீட்டுபவர்களுக்குப் பரிசுகளை வழங்குவார்.

## சீனித்தட்டுப்பாடு

சுன்னுகப்பகுதியில் கடந்த சில நாட்களாக சீனித்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாகப் பொதுமக்கள் பெரிதும் கஷ்டத்துக்குள்ளாகியிருக்கின்றனர். இப்பகுதிகளில் சில இடங்களில் 80 முதல் 90 சதம் வரை சீனி விற்கப்படுகிறது.

## மாதிரி மந்திரிசபை வெளியிடப்படும்?

கொழும்பு, வியாழன்
இடதுசாரி முன்னணியினர் ஆட்சிக்கு வந்தால் யார் தலைமைவகிப்பது என்பதில் பிரச்னை ஏற்படும் என்று நிலவி வரும் வதந்திகளை ஒழிப்பதற்காக இடதுசாரி முன்னணியினர் ஒரு மாதிரி மந்திரிசபை ஒன்றை அமைக்க விருப்பதாகச் சொல்லப்படுகிறது. இவ்விதம் மாதிரி மந்திரிசபை ஒன்று அமைக்கவேண்டும் என்று இடதுசாரி வட்டாரங்களில் கருத்து நிலவி வருகின்றது. இதை முன்னணி தலைமைப்பீடம் ஏற்றுக் கொண்டால் விரைவில் மாதிரி மந்திரிசபை விபரம் வெளியிடப்படும்.

## சிங்களத்தில் தேர்ச்சி வேண்டும்

கொழும்பு, வியாழன்
1956-ம் ஆண்டுக்கு முன்னர் அரசாங்க சேவையில் சேர்ந்த 'பழைய' உத்தியோகத்தர்களாக அரசாங்க சேவையில் சேருவதற்கு சிங்களத்தில் போதிய தேர்ச்சியடைந்திருக்க வேண்டுமென அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இத்தீர்மானம் குறித்து நிரந்தரக் காரியதரிசிகளுக்கும், இலாகா தலைவர்களுக்கும் அனுப்பிய சுற்றறிக்கையில் இனிமேல் இலாகாத் தலைவர்கள் உத்தியோகத்தர்களை தேர்ந்தெடுப்பதற்கோ பொது சேவைக் கமிஷனுக்கு சிபார்சு செய்யும் பொழுது அவர்களுக்குள்ள சிங்களத் தகுதி பற்றிக் குறிப்பிட வேண்டுமென கேட்கப்பட்டுள்ளனர்.

## உலகில் இறப்பவர் தொகை குறைவு
### பிரபல விஞ்ஞானி எச்சரிக்கை

லண்டன், மே 9
"உலகில் இப்பொழுது இறப்பவர்களையும் பார்க்க பிறப்பவர்களின் தொகைதான் அதிகம் என்றும் உலகின் குடிசனப் பெருக்கம் குறைய வேண்டும்" என்றும் பிரபல விஞ்ஞானியான டாக்டர் மாஸ்டன் எச்சரிக்கை செய்துள்ளார்.

உலகில் அதிகரித்துவரும் ஜனப்பெருக்கம் குறித்து அவர் வெளியிட்டுள்ளதுண்டுப்பிரசுரத்தில் கூறப்பட்டிருப்பதாவது: "உலகில் ஜெனனம்அதிகரித்து வருகிறது. ஆனுல் இறப்பவர்களின் தொகையோ குறைந்து கொண்டு போகிறது. தற்போதைய ஜனப்பெருக்கம் குறையாவிட்டால் இதனுல் உலகில் பெரும் அபாயம் தோன்றலாம் என்று நான் எச்சரிக்கை செய்கின்றேன்.

இன்னும் 1,700 வருடங்களின் பின்னர் மனிதஇனத்தின் மொத்தத் தொகை, பூமியிலுள்ள காணிகளின் அளவுக்கு அதிகரித்துவிடும்.

இறப்பவர்களின் தொகை குறைவதற்கு தற்கால விஞ்ஞான வைத்திய முறைகள் தான் காரணமாகும். உலகில் இறப்பவர்களது தொகை குறைந்துகொண்டே போனுல் உலகம் விரைவில் இருள் சூழ்ந்ததாக மாறிவிடும்."

## பிரிட்டிஷ் கயானவில் அவசரகாலநிலைமை

ஜார்ஜ்டவுண், மே 9
பிரிட்டிஷ்கயானவில் அவசரகாலநிலைமை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த பலநாட்களாக நடைபெற்றுவரும் பல்வேறு தொழிற்சங்கங்களின் வேலைநிறுத்தம் இன்னும் முடிவடையவில்லை. வேலைநிறுத்தம் சம்பந்தமாக தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் பிரிட்டிஷ் கயான மந்திரிகளுக்கும் நடைபெற்றபேச்சுவார்த்தை முறிந்து போனதைத் தொடர்ந்து அவசரகாலநிலைமை இங்கு பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது.



# மங்கையர் ★ ★ உலகம்

# ரஷ்யாவில் மாமியார்-மருமகள் சண்டை

**மாமியார்-மருமகள் சண்டை நமது நாட்டில்மட்டும்தானிருக்கிற தென்று சிலர் நினைக்கிருர்கள். ஆனல் வெளி நாடுகளில், மாமி யாருக்கும் மருமகளுக்கும் எப்படிச் சண்டைகள் உண்டாகின்றன: இருவருக்குமிடையே தோன்றும் பூசல்களை ஒழிக்க எப்படியான 'முறைகள்' கையாளப்படுகின்றன என்பதெல்லாம் நம்மில் பலருக் குத் தெரியாது. முன்னேற்றமுள்ள நாடுகளிலும் மாமியார்-மரு மகள் சண்டை நடக்குமா என்று கூட சிலர் நினைக்கலாம்! ஆனல் இந்த அணுயுகத்தில் மிகவும் முன்னேற்றமடைந்த ரஷ்யா வில், மாமியார்-மருமகள் சண்டை எப்படித் தோன்றுகிறது; பின் னர் அது எப்படித் தீர்க்கப்படுகிறது என்பதை சோவியத்-இந்திய கலாசாரக் கழகத்தின் பிரதிநிதியான குஸ்லேவா இங்கு ருசிகர மாகக் கூறுகிருர். படித்துப்பாருங்கள்.**

ரஷ்யாவில், கணவன் தன் மீதுமட்டுமே முழு அன்பையும் செலுத்தவேண்டுமென்று இளம் மனைவி விரும்புகிருள். வயதான தாய், மகனுக்கு தன் மீது அன்பு குறைந்துபோய் விடக்கூடாதென முயற்சிக்கிருள். இவர்கள் இருவரும் பெறவிரும்பும் அன்பு மாறுபட்டதாக இருந்தபோதிலும்கூட மாமியாருக்கும் மருமகளுக்கும் இடையே ஒருவித பொருமை தோன்றுகிறது. இவர்களிடையே ஒத்த மனப்போக்கு இல்லாததால் பூசல் ஏற்படுகிறது!

மனைவியுடன் இல்லற வாழ்க்கை நடத்தும் ஒருவன் தனது தாயுடன் வசிக்காமல் மாமியாருடன் வசித்தால் இவ்வித மான பிரச்னை ஏற்படுவதில்லை. கணவனுடன் குடித்தனம் நடத்தும் மகளைக் கண்டு அவளது தாய் பொருமை கொள்வதில்லை. எனவே ரஷ்யாவில் பல வீடுகளில் கல்யாணமான தம்பதிகளுடன் பெண்ணின் தாய்மட்டும் சேர்ந்து வசிக்கிருள். மாமியார் மருமகள் பூசலைத் தவிர்க்க இந்த முறை கையாளப்படுகிறது.

அமெரிக்காவில் மாமியார்-மருமகள் பூசலைத் தவிர்க்க வேறு முறை கையாளப்படுகிறது. கல்யாணமான ஒரு அமெரிக்கப் பெண் இப் பிரச்னைபற்றி குறிப்பிடுகையில் "அமெரிக்காவில் மாமியார் பிரச்னையே கிடையாது. ஏனெனில் தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளுடன் சேர்ந்து வசிப்பதில்லை. எனவே மருமகளுக்கும் மாமியாருக்கும் பூசல் ஏற்படும் பிரச்னையே ஏற்படுவதில்லை" என்ருர். இவ்வாறு தனித்து வாழும் தாய்மார்கள் எப்போதாவது விருந்தினர் போல வந்து மகளுடன் தங்கிச் செல்கின்றனர் என்றும் அந்த அமெரிககப் பெண் கூறினர்.

அமெரிக்கப் பெண்கள் பொருளாதார ரீதியில் ஆண்களை அண்டிப் பிழைத்தாக வேண்டும் என்ற நிலையில் இல்லை அவர்கள் தனித்து வாழ பொருளாதார வசதி கொண்டவர்கள். எனவேதான் இது சாத்தியமாகிறது என்ருர் அந்த அமெரிக்கப் பெண்.

## தமிழ்ப்பெண்ணின் சாதனை

தென்னுப்பிரிக்காவிலேயே முதல் தடவையாக ஒரு இந்தியப்பெண் கண் மருத்துவராக தேர்ச்சிபெற்றுள்ளார். 24 வயதான இந்தப் பெண்ணின் பெயர் வாசுகி நாயக்கர். தென்னுப்பிரிக்காவைச் சேர்ந்த வாசுகி நாயக்கர் பிரிட்டனில் கிளாஸ்கோ நகரில் உள்ள ஸ்டோ கல்லூரியில் மூன்ருண்டுகாலம் படித்து கண்மருத்துவத்துக்கான டிப்ளோமா பெற்றுள்ளார்.

## குதிஉயர்ந்த செருப்பை அணிவது நல்லது

குதிஉயர்ந்த செருப்புக்களை பெண்கள் அணிவது அவர்களுக்கு நல்லது என்றுசில அமெரிக்க டாக்டர்கள் கூறுகின்றனர். ஆனல் இந்தவகைச்செருப்புகளைப்பெண்கள் அணியும் வழக்கம் குறைந்து வருகிறது.

இச் செருப்புகள் அணிவதால் அவை பாதத்தை தட்டையாக்குவதில்லை என்றும், பாதத்தின் வளைவுகளை நிமிர்த்திவிடும் என்றும் அமெரிக்காவிலுள்ள ஆராய்ச்சி நிபுணர்கள் கண்டு பிடித்திருக்கின்றனர். குதியுயர்ந்த செருப்புகள் நிற்கும் நிலையழகைப் பாதித்துவிடும் என்பது தவறு என்றும் அந்நிபுணர்கள் கூறுகின்றனர்.

## சிற்பசாஸ்திரசம்ஸ்கிருதநூல்: அமெரிக்கப்பெண் மொழிபெயர்ப்பு

சிற்பசாஸ்திரம்பற்றி சம்ஸ்கிருத மொழியில் உள்ள நூலை ஒரு அமெரிக்கப்பெண் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வருகிருர். சம்ஸ்கிருத மொழியை நன்கு கற்றுணர்ந்தவரான இப்பெண் கடந்த 2 வருடங்களாக காசி நகரில் தங்கி இந்த மொழிபெயர்ப்பு வேலையில் ஈடுபட்டுள்ளனர். உத்திர பிரதேசம், பீகார் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த சம்ஸ்கிருதமொழி வல்லுநர்களின் ஒத்துழைப்பையும் அவர் பெற்றுவருகிருர்.

சிற்ப சாஸ்திரம், யோக முறை, தந்திரம் ஆகியவற்றை கற்பதற்காக இந்தியாவுக்கு மாணவர்களை அனுப்பிவரும் அமெரிக்க ஐரோப்பிய சர்வ கலாசாலைகளுக்கு மேற்படி மொழிபெயர்ப்பு நூல் பெரும் உதவியாக இருக்குமென கருதப்படுகிறது.

# வழி காட்டும் அழகிகள்

ஜெர்மன் நகரில் சுமார் இரு டஜன் அழகிகள் உல்லாசப் பயணிகளுக்கு வழிகாட்டும் பயிற்சி பெற்றுள்ளனர். அவர்கள் அணியும் பாட்ஜ்களிலிருந்தே எந்த அயல்நாட்டு மொழிகள் அவருக்குத் தெரியும் என்பதைத் தெரிந்துக் கொள்ளலாம். இவர்கள் இதற்

(7ம் பக்கம் பார்க்க)

## தாய்ப்பாலின் மகிமை

தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளுக்கு நோய் நொடி அவ்வளவாக வருதில்லை என்று பெண்டாக்டர் மேவிஸ் குந்தர் தெரிவித்தார். புட்டிப்பால் குடிக்கும் குழந்தைகளுக்கு மூச்சுவிடுவது சம்பந்தமான நோய்களும், வயிறு-குடல் தொடர்புடைய நோய்களும் சின்னம்மை போன்ற நோய்களும், தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளைவிட அதிகமாக வருகிறது.

மலேரியா நோயுள்ள பகுதிகளில் உள்ள தாய்ப்பாலருந்தும் குழந்தைகளில் சிலவே அந்நோய்க்கு ஆளாகின்றன என்றும் டக்டர் மேவிஸ் தெரிவித்தார்.

## ஆஸ்திரேலிய அழகுப் போட்டிக்கு இந்திய மங்கை

1963-ம் ஆண்டுக்கான ஆஸ்திரேலிய அழகுப் போட்டியில் கொலீன் தினூதி என்னும் 20 வயதுப் பெண கலந்துகொள்கிருர். மிகவும் கவர்ச்சியும் இனிமையான குரலும் உடைய தினூதி கல்கத்தாவிலிருந்து இங்கு தன் பெற்ருேருடன் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னுல் குடியேறினர்.

ஆஸ்திரேலிய அழகுப் போட்டியில் "ஆஸ்திரேலியக்குமரி" யாகத் தேர்ந்தெடுக்கப்படுபவருக்குச் சுமார் ரூ. 2½ லட்சம் பரிசு அளிக்கப்படும். இப் போட்டி ஆண்டுதோறும் நடைபெறுகிறது.





நாளுக்கு நாள் கடின பாவனைக்கு நிகரற்று விளங்குவது.

கனபோ பொப்ளின்

ஆமாம், நாளாந்தம் கடுமையாக உழைப்போர்க்கு உகந்த சிறந்த கடினமான, நன்கு பாவிக்க வல்ல புடவை இதுவே! கனபோ பொப்ளின்பாடசாலை யூனிபோம்களுக்கும் கந்தோர் ஷர்ட்டுகளுக்கும் மிகச் சிறந்தது. வெள்ளையிலும், மென்மையான பல வண்ணங்களிலும் கிடைக்கும். சாயம் போகாது என்பதற்கு உத்தரவாதமுடையது.

ஏகவினியோகஸ்தர்கள்: ஸி. டப்ளியூ. ஈ.

கிடைக்குமிடம்: ஸி. டப்ளியூ. ஈ. இலாகா ஸ்டோர், கோட்டை, கொழும்பு. மக்கலம் ... மெயின் வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும் ஸி. டப்ளியூ. ஈ. CWE தரத்திலும் ரகத்திலும் சிறந்ததைத் தருகிறது.

CWE 1A 119

# வானொலி நிகழ்ச்சிகள்

வெள்ளி 10-5-63

## கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 எஸ். விஜசித்தம்பி—பக்திப் பாடல்கள், 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாகஸ்வரம், 6-15 கிராம சஞ்சிகை, 6-45 வீணை.

இரவு 7-00 ஞானாஞ்சலி, 7-30 நேயர் விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 விமர்சனங்கள், 9-30 மகாராஜபுரம் வி. சந்தானம்—பாட்டு.

## திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள் வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-35 திருவாரூர் டி. எஸ். லெட்சப்பா—நாகஸ்வரம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 மாதர் நிகழ்ச்சி, 1-30 குரல் இசை, 1-50 வாத்திய இசை, 2-10 வைதேகி ராஜகோபாலன்—பாட்டு.

மாலை 5-15 திருவாரூர் டி. எஸ். லெட்சப்பா—நாகஸ்வரம், 5-45 காந்தி அஞ்சலி, 6-30 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 பொங்கியெழும் பாரதம்—சித்திரம், 7-45 மதுரை ஸ்ரீரங்கம் ஐயங்கர்—பாட்டு, 9-15 பலகணி, 9-30 அருணகிரிநாதர் இசை விழா.

---

# ஆர்ப்பாட்ட தலைவருக்கு ஆறுமாதம் சிறை

## பர்மிங்ஹாம் நகரில் ஆயுதம் தரித்த பொலிஸார் ரோந்து

அலபாமா, மே 9

**இன ஒதுக்கலை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்திவரும் நீக்ரோக்களின் தலைவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார். இவருக்கு ஆறுமாதம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. பர்மிங்காம் நகரில் ஆர்ப்பாட்டம் நடத்திய 2000-க்கும் அதிகமானவர்கள் இதுவரை கைதுசெய்யப்பட்டு z சிறையில் வைக்கப்பட்டுள்ளனர்.**

இன ஒதுக்கலை எதிர்த்து இங்கு பல இடங்களிலும் நீக்ரோக்கள் ஆர்ப்பாட்டம்நடத்தி வருகிறபோதிலும் நேற்றுக் கைது செய்யப்பட்டவர்களின் தொகை வெகு குறைவென்றும் நகரின் முக்கிய பகுதிகளில் எல்லாம் ஆயுதம் தரித்த பொலிஸார் காவல்புரிகின்றனரென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்களின் நடமாட்டம் கடந்த இரண்டு வாரகாலமாக உச்சக்கட்டத்தை அடைந்திருந்தது. ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைக்கும் முயற்சியில் நகரப்பொலிஸார் எவ்வளவோ முயற்சி எடுத்தும் நிலைமையில் திருப்தி ஏற்படவில்லை. இதன்காரணமாக நேற்று ஆயுதம் தரித்த சுமார் 500 ராணுவத்தினர் நகரின் முக்கிய வீதிகளில் ரோந்து சுற்றினர். ராணுவத்தினரிடம் இயந்திரத்துப்பாக்கிகள், சுழல் துப்பாக்கிகள் ஆகியன இருந்தன.

நேற்று முன்தினம் சுமார் 50 பேர் கைதுசெய்யப்பட்டுச் சிறையில் வைக்கப்பட்டனர். திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஆயிரமாகவிருந்தது.

கடந்த இரண்டு வாரங்களாக நீக்ரோக்கள் நடத்தி வந்த ஆரப்பாட்டத்தைநேற்று 24 மணி நேரத்துக்கு நிறுத்தி வைப்பதென ஆர்ப்பாட்டக்காரர்களின் தலைவர் அறிவித்திருந்தார். ஆனல் பின்னர் அவர் கைதுசெய்யப்பட்டார்.

---

# தமிழரசுக் கட்சியின் செயற்குழு

## 17-ம், 18-ம் திகதிகளில் மன்னூரில் கூடும்

யாழ்ப்பாணம், வியாழன்

இலங்கை தமிழரசுக் கட்சியின் செற்குழுக் கூட்டம் இம்மாதம் 17, 18ம் திகதிகளில் மன்னூரில் நடைபெறவிருக்கிறது. 11, 12ம் திகதிகளில் நடைபெறவிருந்த செயற்குழுக்கூட்டம் பின்போடப்பட்டுள்ளது.

அவசரகால நிலைமை நீக்கப்பட்டபின் நடைபெறும் தமிழரசுக்கடசியின் முதலாவது செயற்குழுக்கூட்டம் இதுவாகும். தமிழரசுக் கடசியின் செயற்குழு தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நிலைமைகளைப்பற்றி ஆராயவிருக்கிறது. பார்லிமெண்ட் நீண்டகாலத்திற்கு ஒத்திவைக்கப்பட்டதுபற்றியும், தமிழரசுக் கட்சியின் நிலை என்ன என்பது பற்றியும் பரிசீலனை செய்யப்படலாம் என்று தெரிகிறது. தமிழியக்கம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடத்தப்பட்டபின் அதனைத் தொடர்ந்து சமூக ஒற்றுமை வாரம் ஆரம்பிக்கப்படவிருந்தது. உடுவில் மக்கள் முன்னேற்றமன்றம் மானிப்பாயில் திடீரென நடத்திய தேநீர்க்கடைப பிரவேசம் சம்பந்தமாக ஏற்பட்டுள்ள நிலைமையை ஆராய்வதும் இச்செயற்குழுக் கூட்டத்தின் நோக்கமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. தேநீர்க்கடைப பிரவேசத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுப்பதுபற்றியும் செயற்குழு முடிவு செய்வதுடன், சமூக ஒற்றுமை இயக்க வாரத்தை எப்போது நடத்துவதெனவும் முடிவு செய்யப்படக்கூடும் எனக் கட்சி வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

மானிப்பாயில் நடைபெற்ற தேநீர்க்கடைப் பிரவேசம் சம்பந்தமாக ஏற்பட்டுள்ள நிலையைச் சமரசப்படுத்தும் முயற்சியில் உடுவில் எம். பி. யும், மானிப்பாய் கிராமசபைத் தலைவரும் ஈடுபட்டுள்ளனர். இதனல் வழக்குவைக்கும் முயற்சி உடனடியாக மேற்கொள்ளப்படவில்லை.

---

# "மொழிப் பிரச்னையை உடனடியாகத் தீர்க்கவும்"

## இ. மு. எ. சங்கம் அரசாங்கத்துக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், வியாழன்

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் வருடாந்தப் பேரவைக் கூட்டம் புதன்கிழமை காலை நகர மண்டபத்தில் நடைபெற்றது. டாக்டர் செ. சிவஞானசுந்தரம் இக்கூட்டத்திற்குத் தலைமைவகித்தார்.

பொதுச் செயலாளர் திரு. பிரேம்ஜி சமர்ப்பித்த அறிக்கைமீது நீண்டநேர விவாதம் நடைபெற்றது. உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்றது. திரு. பிரேம்ஜி மீண்டும் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

செயலாளர்கள்: கா. சிவத்தம்பி, சில்லையூர் செல்வராசன், நீர்வை பொன்னையன், பொருளாளர்: திரு. செ. கணேசலிங்கம், உதவிப் பொருளாளர் திரு. அகஸ்தியர், அமைப்பாளர். திரு. பி. இராமநாதன்.

திருவாளர்கள் சொக்கன், இளங்கீரன், ஈழத்து சோமு முதலான 35 பேர் நிர்வாக சபையினராகத் தெரிவுசெய்யப்பட்டனர். நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

மொழிப் பிரச்னையின் காரணமாக தேசிய ஒற்றுமை பிளவுபட்டிருப்பதனைக் கண்டு இம்மகாநாடு வருந்துகிறது. நாட்டின் அபிவிருத்திக்கு இது பெரும் முட்டுக்கட்டையாக இருந்துவருகிறது. எனவே மொழிப்பிரச்னையை உடனடியாகத் தீர்த்து, தேசிய ஒற்றுமையைக் கட்டிக் காத்து, தமிழ் மக்களின் நம்பிக்கைக்கு ஒரு ஸ்திரமான அத்திவாரத்தை இடுமாறு அரசினரைக் கேட்டுக்கொள்கிறது.

நாட்டில் வளர்ந்துவரும் முற்போக்குச் சக்திகளை இம்மகாநாடு வரவேற்பதுடன், இந்த ஒற்றுமையை கலை இலக்கியத் துறைக்கும் விரிவுபடுத்தி அதனைக் கட்டிக்காத்துவருமாறு மக்களையும் எழுத்தாளர்

(8-ம் பக்கம் பார்க்க)

---

# 'பொக்காரா எஃகு ஆலைக்கு அமெரிக்கா உதவவேண்டும்'

## —ஜனாதிபதி கென்னடி

வாஷிங்டன், மே 9

"பொக்காரா எஃகு ஆலைக்கு அமெரிக்கா உதவியளிக்க வேண்டும். பாரதத்துக்கு இப்பொழுது எஃகு அவசியம் தேவைப்படுவதால், அமெரிக்காவின் உதவி நிச்சயம் பாரதத்துக்குக் கிடைக்க வேண்டும்" என்று அமெரிக்க ஜனாதிபதி கென்னடி நேற்றுத் தெரிவித்துள்ளார்.

நேற்று வாஷிங்டனில் நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில், அமெரிக்க ஜனாதிபதி கென்னடி பேசுகையில், பாரதத்திலுள்ள பொக்காரா எஃகு ஆலையை இந்திய அரசாங்கம் மூடவிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. ஆனல் பாரதத்துக்கு எஃகு இப்பொழுது அவசியம் தேவைப்படுவதால் பொக்காரா எஃகு ஆலையை அமைக்கும் முயற்சியில் பாரத அரசாங்கம் பின்நிற்கக் கூடாதென்றும் கூறினர்.

### பிரி. பத்திரிகை கருத்து

பொதுத் துறையில் இந்தியா அமைக்க விரும்பும் பொக்காரா எஃகு ஆலைத் திட்டத்துக்கு உதவி செய்யும் பிரச்னையானது அமெரிக்காவின் நிதிஉதவித் திட்டத்துக்குப் பெரும் சோதனையாக அமைந்திருக்கிறது என்று பிரிட்டிஷ் பத்திரிகை கருத்து தெரிவித்துள்ளது.

பொக்காரா எஃகுஆலைபற்றி அமெரிக்கா எந்தவிதமான முடிவு எடுத்தாலும் அது உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ அரசியல் தகராறை ஏற்படுத்தும் என்ற காரணத்தால் அமெரிக்க நிர்வாகம் சோதனைக் கட்டத்தில் உள்ளதென்றும் அப்பத்திரிகை கருத்துத் தெரிவித்துள்ளது.

தனியார் துறையில் உள்ள தொழிலுக்குப் போட்டியாக அரசாங்க துறையில் ஆரம்பிக்கப்படும் தொழிலுக்கு அமெரிக்கா உதவியளிக்கக் கூடாதென்று "கிளேகமிட்டி" தனது அறிக்கையில் சிபார்சு செய்துள்ளதே அமெரிக்காவின் இந்த இக்கட்டான நிலைக்குக் காரணமாகும். பொக்காரா எஃகு ஆலைபற்றி அமெரிக்க உருக்கு கார்ப்பரேஷன் தயாரித்தஅறிக்கையையேஇப்போது கென்னடியும் தனது ஆலோசகர்களும் ஆராய்ந்து வருகின்றனர்.

---

# அன்ரனிஸ் கோஷ்டி வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் உதைபந்தாட்டச்சங்க ஆதரவில் பாஷையூர் அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்திற்கும் ஒறியன்ட்ஸ் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெறவிருந்த 'பி' பிரிவுப் போட்டியில் ஒறியன்ட்ஸ் கோஷ்டி விளையாட வராத காரணத்தால் அன்ரனிஸ் கோஷ்டிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

அன்ரனிஸ் 'ஏ' பிரிவுக் கோஷ்டிக்கும் சண்டிருப்பாய் கிருஸ் கொப்பர்ஸ் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் அன்ரனிஸ் 4—0 கோல்களால் வெற்றியீட்டியது. பொலிஸ் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. பி. ஏகாம்பரம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

# வல்வைக் கோஷ்டி வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் உதைபந்தாட்டச் சங்கம் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி அமைப்பில் 'பி' பிரிவுப் போட்டியில் வல்வெட்டித்துறை புளூஸ் கோஷ்டியும், குருநகர் கோஷ்டியும் கலந்துகொண்டன. வல்வை புளூஸ் 2-0 கோல்களால் வெற்றியீட்டியது. யாழ்ப்பாணம் பொலிஸ் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. சி. கே. குமரையா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

# முதலுதவிப் பெட்டி இல்லை

கண்டி, வியாழன்

கண்டி தெற்கு, கண்டி வடக்கு டிப்போக்களைச் சேர்ந்த புதிய பஸ்களில் முதலுதவிப் பெட்டிகள் இணைக்கப்படவில்லை. இந்த டிப்போக்களிலிருந்து செல்லும் அதிகமான பஸ் வண்டிகள் தூரப் இடங்களுக்கு செய்வன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

---

# தம்பாட்டிக்கு வெற்றி

ஊர்காவற்றுறை, வியா.

நாரந்தனை கிராமசபையைச் சேர்ந்த தம்பாட்டி சனசமூக நிலையக் கோஷ்டிக்கும் மெலிஞ்சிமுனை திரு இருதய சனசமூகநிலையக் கோஷ்டிக்குமிடையே மெலிஞ்சிமுனை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான கரபந்தாட்டப் போட்டியில் தம்பாட்டிக் கோஷ்டி இரு ஆட்டங்களிலும் வெற்றிபெற்றது.

திரு. அழகையா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

# மாட்டுவண்டி சவாரிப்போட்டி

ஊர்காவற்றுறை, வியா.

நாரந்தனை கிராமசபைக்குட்பட்ட புளியங்கூடல் மகாமாரி' சனசமூக நிலையத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டியையொட்டி மாட்டுச் சவாரிப்போட்டியொன்று சென்ற வாரம் மாலை புளியங்கூடல் "புதுவெளி" விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. சவாரியைப் பார்ப்பதற்கு மைதானத்தில் ஏராளமானேர் திரண்டிருந்தனர்.

புளியங்கூடல் வட்டாரத்தைச் சேர்ந்த பல வண்டிகள் இப் போட்டியில் கலந்துகொண்டன. திரு. வே. சதாசிவம் முதலாவது இடத்தையும் திரு. பொ. கந்தையா இரண்டாவது இடத்தையும் திரு. பி. சரவணமுத்து மூன்ருவது இடத்தையும் பெற்றனர்.

---

# உடுப்பிட்டி 10-ம் வட்டார தேர்தல்

யாழ்ப்பாணம், வியாழன்

கடந்த வாரம் நடைபெற்ற உடுப்பிட்டிக் கிராமசபைத் தேர்தலில் 10-ம் வட்டாரத்துக்கு வாக்களிப்பு நடைபெறவில்லை. வாக்களிப்புநிலையங்கள் உடுப்பிட்டி கிராமசபையின் எல்லைக்கு அப்பாற்பட்டிருப்பதாக கிளப்பப்பட்ட ஆட்சேபனையே இதற்குக் காரணமாகும்.

இந்த வட்டாரத்தின் தேர்தல் இம்மாத இறுதியில் நடைபெறும எனவும் திகதி இவ்வாரத்தில் அறிவிக்கப்படும் எனவும் தெரிய வருகிறது.

வாக்களிப்பு நிலையமாக மாலி சந்தையிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

---

# வழி காட்டும்.....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

சான விசேஷ பயிற்சி பெற்றுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலோருக்கு இரண்டு அல்லது மூன்று மொழிகள் தெரியும். இவர்களுக்கு ஆங்கிலம் அவசியம் தெரிந்தாகவேண்டும். இவர்கள் எல்லோருக்குமே அநேகமாக ஸ்பானிஷ் மொழி தெரியும். டேனிஷ், ஸ்வீடிஷ், நார்வேஜியன், பின்னிஷ் இம்மொழிகளும் தெரிந்திருக்கவேண்டியிருக்கிறது. ஏனெனில் பெரும்பாலான உல்லாசப் பயணிகள் அந்த நாடுகளிலிருந்துதான் வருகிருர்கள்.

ரஷ்யாவிலிருந்து வரும் உல்லாசப் பயணிகள் சௌகரியத்திற்காக ரஷ்ய மொழி தெரிந்த இரண்டொரு அழகிகளும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு முழு நேர வேலை. நிறைய சம்பளம் கொடுக்கப்படுகிறது. பாதி நேர வேலைக்கும் சிலர் சேர்க்கப்பட்டுள்ளனர். மாணவர்கள், காரியதரிசிகள், ஆசிரியர்கள், வீட்டுத் தலைவிகள் தங்கள் வேலைநேரம் போக பாக்கி நேரங்களில் இந்த வேலையை மேற்கொண்டு பணம் சம்பாதிக்கின்றனர். ஒவ்வொருவருக்கும் இரண்டு 'ரெடிமேட்' உடைகள் தரப்படுகின்றன. சிவப்பு தலையணியை இவர்கள் அலங்காரமாக அணிகின்றனர்.

இப்போதுள்ள 22 பேர்களைத் தவிர சர்வதேசத் தோட்டக் கலை மகாநாட்டின்போது மேலும் 28 பேர்கள் இப்பணிக்கு அமர்த்தப்படுவர். சுமார் ஒரு கோடி பேர் இக்கண்காட்சியின்போது விஜயம் செய்வர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கோலாலம்பூரில்

# யாழ்ப்பாணம் டாக்டருக்கு 6 மாதம் சிறை

கோலாலம்பூர், மே 8

ஊழல் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதால் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த டாக்டர் ஒருவருக்கு இங்கு 6 மாத தண்டனை விதிக்கப்பட்டது.

எஸ். சிவசிதம்பரம் என்ற பெயருடைய இந்த டாக்டர் கோலாலம்பூரிலுள்ள பெரியாஸ்பத்திரியில் கடமையாற்றி வந்தார். 1961-ம் வருடத்தில் இலங்கையிலிருந்து இங்குவந்த இவர் மேற்படி ஆஸ்பத்திரியுடன் செய்துகொண்ட சேவைக் கால ஒப்பந்தம் இந்தவருட இறுதியில் முடிவடையவிருக்கிறது.

தண்டனை விதிக்கப்பட்டபின் சிவசிதம்பரம் நமது வழக்கறிஞர் திரு. டி. ஆர். சீனிவாசகத்தின் மூலம் அப்பீலுக்கான முன்னறிவித்தலை தாக்கல் செய்தார். சிவசிதம்பரம் பின்னர் 4,000 மலாயன் டாலர் பிணையில் அனுமதிக்கப்பட்டார்.

இவர்மீது தொடரப்பட்டிருந்த வழக்கு விசாரணை 14 நாட்கள்வரை நடைபெற்றது.

---

## செஞ்சிலுவைச் சங்க 100-வது விழா

புதுடில்லி, மே. 8

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நூறாவது ஆண்டு விழா இன்று உலகின் பல பகுதிகளிலும் கொண்டாடப்பட்டது. பாரதம் உட்பட 90 நாடுகளில் இந்த விழா கொண்டாடப்பட்டது. நூறாவது விழாவை முன்னிட்டு பாரதத்தில் விசேஷ பத்து சத முத்திரை இன்று விற்பனைக்கு விடப்பட்டது.

---

கொழும்பு, புதன்

இலங்கைக்கு வரும் உல்லாசப் பிரயாணிகள் இங்கு வாங்கும் பொருள்களை எடுத்துச் செல்வது சம்பந்தமாக இரு புதிய கட்டுப்பாட்டு விதிகள் விதிக்கப்பட்டுள்ளன.

## ரயிலுடன் கார் மோதியது ஒரு பெண் கொல்லப்பட்டார்

கொழும்பு, வியாழன்

களனிப் பகுதியிலுள்ள ரயில் கடவையொன்றில், ஓடிக்கொண்டிருந்த ஒரு ரயிலுடன் கார் மோதியதால் காரில் சென்ற ஒரு பெண் கொல்லப்பட்டார். மூவர் காயமுற்றனர்.

இந்த பரிதாப சம்பவம் இன்று காலை 4-30 மணிக்கு இடம் பெற்றது.

---

## கிராமத் தொண்டர் படை

புதுடில்லி, மே 8

நாடு பூராவும் மொத்தம் 97 லட்சம் கிராமத் தொண்டர்கள்சேர்ந்திருக்கின்றனர். கிராமத் தொண்டர்படையில் பெருமளவில் பெண்கள் சேர்ந்திருக்கின்றார்கள்.

---

## தலைவர் தெரிவில் உடன்பாடு?

யாழ்ப்பாணம், வியாழன்

அச்சுவேலி கிராமசபையின் தலைவர், உபதலைவர் ஸ்தானங்களுக்கான தெரிவுகளுக்கு அங்கத்தவர்களிற் பலர் கூட்டு முன்னணி அமைத்திருப்பதாகவும் தலைவர் உப தலைவர் தெரிவுகள் பற்றி இவர்கள் உடன்பாடுசெய்திருப்பதாகவும் தெரியவருகிறது.

# உதவி நீதி மந்திரிப் பதவி யாழ். எம். பி.க்கு இல்லை?

## தாழ்த்தப்பட்ட சிங்கள எம். பி. நியமனமாகலாம்

### வீரசேகராவுக்கு உதவி தொழில் மந்திரி பதவி?

கொழும்பு, புதன்

திரு. அசோகா கருணரத்னவுக்குப் பதிலாக யாழ்ப்பாணம் எம். பி. திரு. அல்பிரட் துரையப்பா உதவி நீதிமந்திரியாக நியமிக்கப்படக்கூடும் என்ற வதந்தி செயல்படாது என அறிவிக்கப்படுகிறது. பிரதமர் வேறொருவரை இப்பதவிக்கு நியமிக்க விரும்புவதே இதற்குக் காரணம் எனவும் தெரிகிறது.

சிங்கள சமூகத்தில் தாழ்த்தப்பட்ட ஒரு பிரதிநிதி இந்தப் பதவிக்கு நியமிக்கப்படலாமென அரசியல் வட்டாரங்களில் வதந்திகள் இப்பொழுது அடிபடுகின்றன. திரு. அசோகா கருணரத்ன தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மாவத்தைகம எம். பி. திரு. டி. பி. விக்கிரமசிங்காவுக்கு இந்தப் பதவி அளிக்கப்படலாமென நம்பப்படுகிறது.

உதவி தொழில் தேசிய மய சேவை அமைச்சர் பதவியில் யட்டிநுவரை எம். பி திரு. யு. பி. வீரசேகராவே மீண்டும் அமர்த்தப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனப்பிரதிநிதிகள் சபை மீண்டும் கூடு முன்னர் திரு. யு. பி. வீரசேகராவுக்கு இப்பதவி அளிக்கப்படலாமென அறியப்படுகிறது.

---

## "மொழிப் பிரச்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

களையும் இம்மகாநாடு கேட்டுக் கொள்கிறது.

ஈழத்தின் பத்திரிகைத்துறையில் நீண்டகாலமாக இருந்து வரும் ஏகபோகத்தைத் தகர்த்து ஜனநாயக சூழலில் பத்திரிகைகளும் இலக்கியமும் வளர நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென இம்மகாநாடு கருதுகிறது. ஆனால் இதனைச் சாதிக்கப்போவதாகக் கூறிக்கொண்டு பத்திரிகைகளையும் இலக்கியத்தையும் கட்டுப்படுத்தும் அரசாங்கத்தின்போக்கை இம்மகாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

ஏகபோகத்தை அகற்ற வேண்டும் என்ற மக்களின் ஜனநாயக் கோரிக்கையை பூரணமாக அமுல் நடத்துமாறு இம் மகாநாடு அரசினரைக் கேட்டுக்கொள்கிறது.

ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களை வாங்கி, பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், ஸ்தலஸ்தாபன நூல் நிலையங்களுக்கு விநியோகிக்கவேண்டுமென்று கலாச்சார அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறது.

தாய் மொழியில் விஞ்ஞானத்தைக் கற்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு கல்வி இலாகாவையும் அறிஞர்களையும் இம் மகாநாடு கேட்டுக்கொள்கிறது

---

## உபதேர்தல்

கந்தளாய், வியாழன்

கந்தளாய் கிராமசபையில் இரண்டாம் வட்டார உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட ஜனாப் ரி. அப்துல்காதர் பெரிய கிண்ணியாப் பகுதிக்கு கிராம சேவையாளராகத் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவர் தனது அங்கத்துவப் பதவியை ராஜினாமாச் செய்துள்ளார். இதனால் அவ் வட்டாரத்திற்குஉறுப்பினரைத் தெரிவு செய்வதற்கான உப தேர்தல் மிகவிரைவில் நடைபெறவிருக்கிறது.

## நீதிநெறிகளை தமிழ்ப்புலவர் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கதாபாத்திரங்களின்மீது தமிழ் மக்களுக்கு இருந்த ஈடுபாடு பல்வேறு சூழ்நிலைகளில் அவர்கள் நல்வாழ்வு வாழ்வதற்கு உதவின. இன்றைய ஆக்க இலக்கியங்கள் எதிலும் கதாபாத்திரப் படைப்பு சிறப்பாக அமைவதில்லை.

இலக்கியம் ஒருகலை. இலக்கியத்தை ஆக்கும் புலவனின் கற்பனை வளத்தினுல் தான் இலக்கியம் ஒரு கலையாக மிளிர்கிறது. இலக்கியம் அறிவுக்கலையும் உணர்ச்சிக்கலையும் என்பதை பல்வேறு மொழிகளில் எழுந்த இலக்கியங்கள் எமக்குக் காட்டுகின்றன.

இலக்கியம் ஒரு வாழ்க்கை விமரிசனமாதலின் இலக்கிய கதாபாத்திரங்கள் சமுதாய மக்களுக்கு இலட்சியங்களாக அமையவேண்டும். இதனை இன்றைய சிருஷ்டி இலக்கிய கர்த்தாக்கள் நன்கு மனத்தில் பதிக்கவேண்டும்,

பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி "மனைமாட்சி" என்னும் பொருள்பற்றிப் பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:-

பெண்ணே வீட்டின் தலைவி. தலைவி கணவனின் குறிப்பறிந்து வருமானத்துக்கு ஏற்ற செலவு செய்பவளே உத்தம பெண்மணியாவள். இன்றைய சூழலில் கணவனின் வருவாய்க்குமேல் பெண்கள் செலவு செய்வதனால் குடும்பத்தகராறுகள் பெருகிவருகின்றன. பண்புடைய வாழ்க்கை நடத்தும் பெண், வருவாயின் ஒருபகுதியையே அன்றாட தேவைகளுக்கு எடுத்துக்கொண்டு மிகுதியை வருங்காலத்திற்கு ஒதுக்கிவைக்கவேண்டும். இவ்வித பண்பினாலேயே வாழ்க்கை உயர்வும் மனைமாட்சியும் பெருகும்.

பண்டிதர் வ. நடராசா "இளைஞரும் இலக்கியமும்" என்னும் பொருள்பற்றிப் பேசுகையில் "இளைஞருக்குக் கதை கேட்கும் விருப்பமிருப்பதால் அதனையே பற்றுக்கோடாகக் கொண்டு பழைய இலக்கியங்களில் இளைஞர்க்கேற்ற பகுதிகளைச் சிறுகதைகளாக்கி, இலக்கியத்துக்குக் வழிகாட்டி விடலாம் என்றார்.

சங்க இளைஞர்களால் "இளங்கோ துறவு", "காலனுக்கும் ஒரு காலன்" என்னும் நாடகங்கள் நடித்துக் காண்பிக்கப்பட்டன.

---

## நேபாளத்தில் அயூப்கான்

காட்மாண்ட், மே 9

பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கான் இன்று காட்மாண் போய்ச்சேர்ந்தார். இவர்நேபாளத்தில் நான்கு நாட்கள் தங்கியிருப்பார்.

---

## ஓய்வு பெறுகிறார்

திருக்கோணமலை, வியாழன்

கந்தளாய்ப்பகுதி தலைமைக்காரராகப் பணியாற்றிவந்த திரு. ஆ. சின்னத்துரை தனது முப்பத்திரண்டாவது வருட சேவையுடன் கிராம சேவையாளர் சட்டத்தின்கீழ் ஓய்வு பெறுகிறார். இவரின் இடத்திற்குப் பதிலாக கிராமசேவையாளராக திரு. சந்திரதாஸ நியமனம் செய்யப்பட்டுள்ளார்.


## யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரி மாணவர் பகுதி

கல்லூரி வருடம் : ஆனி 1963-பங்குனி 1964

மேல்வரும் வகுப்புக்களுக்கு மாணவர் அனுமதிக்கப்படுவர்:

1. 1963-ம் ஆண்டு கார்த்திகை மாதத்தில் நடக்கும் பரீட்சைக்கென நடத்தப்படும் உயர்தர பாடசாலைத் தராதரப்பத்திர/பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புக்கள் விஞ்ஞான இயல், கலை இயல்
   H. S. C. / University Prelim. (Science and Arts)
2. 1964-ம் ஆண்டு சித்திரை மாதத்தில் நடக்கும் பரீசைக்கென நடத்தப்படும் பொதுக்கலைத் தகுதி வகுப்பு (போதனமொழி தமிழ்)
   G. A. Q. (Tamil Medium)
3. பி. ஏ. (இலங்கை)
   B. A. (Ceylon)
4. பி. எஸ் சி. (இலங்கை)
   B Sc.—(General) (Ceylon)
5. பி. எஸ் சி.—பகுதி II (இலண்டன்)
   B. Sc.—Part II (London)
6. பி. எஸ் சி. (பொருளியல்)—பகுதி II இலண்டன் பழைய விதிகளும் திருத்தப்பட்ட விதிகளும்
   B. Sc. (Economics)—Part II (London) Old and Revised Regulations.

வைகாசி மாதம் 29-ம் திகதிக்கு முன்னர் உயர்தரப்பாடசாலைத்தராதரப்பத்திர / பல்கலைக்கழகப் புகுமுகவகுப்புகளுக்கு மனுப்பத்திரங்கள் அனுப்பப்படல்வேண்டும். ஏனையவகுப்புககளுக்கு உரியமனுப்பத்திரங்கள் வைகாசி மாதம 26-ம் திகதி தொடக்கம் ஆனி மாதம் 14-ம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். மனுப்பத்திரப் படிவங்களும் பிரமாணப்பத்திரப் பிரதிகளும் கல்லூரி அலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்.

வட்டு கோட்டை — பதிவாளர்.



வெற்றிகரமான 2-வது வாரம்!

தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடி வெற்றியீட்டிய திரைக்காவியம்!

கிங்ஸ்லி (கொழும்பு) — றீகாஸா (வெள்ளவத்தை) — வெலிங்டன் (யாழ்ப்பாணம்) — விஜயா (மட்டக்களப்பு)

ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை) — மொடர்ன் (பண்டாரவளை) — லக்ஷ்மி (இரத்தினபுரி) — விஜிதா (ஹட்டன்) — ஜெமினி (ராகலை)

★ மூன்று உள்ளங்களுக்கு இடையே ஒரு போராட்டம்

★ பாசத்திற்கும் காதலுக்கும் ஏற்பட்ட பயங்கர சோதனை!



சிவாஜி கணேசன்
S. S. ராஜேந்திரன்
பி. சரோஜாதேவி
ஆர். விஜயகுமாரி
எம். ஆர். ராதா
வி. நாகையா
எம். வி. ராஜம்மா
பி. எஸ். வீரப்பா
புஷ்பலதா

நடித்த

பி. எஸ். வி. பிக்சர்ஸ்

ஆலய மணி

டைரக்ஷன் கே. சங்கர்

இசை விஸ்வநாதன் — ராமமூர்த்தி

மனோகரா (யாழ்ப்பாணம்)

ஜெமினி கணேசன் சாவித்திரி நடித்த

பெண்ணின் பெருமை


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு மே மாதம் 10-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.